Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY SM TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 11 (03.02.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :125

## இலங்கை அரசியல் நிலைவரம் குறித்து

# ரோக்கியோவில் அகாஷியைச் சந்தித்து ஆர்மிரேஜ் இந்த வாரம் முக்கிய பேச்சு!



(ரோக்கியோ)

**ஜப்பானின் தலைநகரான ரோக்கியோவில் இந்தவாரம் இடம் பெறவுள்ள அமெரிக்க - ஜப்பான் நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையில் இலங்கையின் அரசியல் நெருக்கடிநிலை குறித்து முக்கியமாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**இந்தக் கூட்டத்தில் அமெரிக்க தரப்பிலிருந்து பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் கலந்துகொள்ளவுள்ளார். ஜப்பான் தரப்பில் விசேட தூதுவர் யசுஷி அகாஷி கலந்துகொள்வார்.**

இரண்டு வாரங்களுக்கு முன்னர் யசுஷி அகாஷி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தான் அறிந்த இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம்மாதம் 27 ஆம் திகதி வொஷிங்ரனில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவிவழங்கும் தொடர் மாநாட்டில் ரோக்கியோ மாநாட்டுக்கு பின்னர் இலங்கையில் நடந்த முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுப்பதற்கான கூட்டம் (12 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகளுடனான பேச்சுக்கள்; ஜனாதிபதியே தீர்மானிப்பார்

### சென்னையில் கதிர்காமர் பேட்டி

(புதுடெல்கி)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு ஜனாதிபதிதான் முடிவெடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷமன் கதிர்காமர் சென்னையில் தெரிவித்தார்.

புதுடெல்கியில் நடைபெற்ற ஆசிய நாடுகளின் ஆறாவது மாநாட்டிற்கு சென்றிருந்த கதிர்காமர், நாடு திரும்பும் வழியில் சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கையின் அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி 2006ஆம் ஆண்டுவரை பதவி வகிக்க முடியும்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகுமாறு அமைப்பாளர்களிடம் சந்திரிகா கோரிக்கை!

(கொழும்பு)

எந்த நேரத்திலும் தேர்தலொன்றை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் சுதந்திரக் கட்சியின் மாவட்டத் தலைவர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் இதர பிரதான கட்சிகளின் தேர்தல் நடவடிக்கைகளையும் ஜனாதிபதி புள்ளி விபரங்களுடன் சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களுக்கு எடுத்து விளக்கினார்.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியை விட சுதந்திரக் கட்சி சில மாவட்டங்களில் முன்னணியில் உள்ளது. இவற்றை நன்கு உறுதியான முறையில் பலப்படுத்த வேண்டும்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு அதிகமுள்ள மாவட்டங்களிலும் சுதந்திரக் கட்சி தனது செல்வாக்கை கொண்டு வர வேண்டுமென அந்தக் கூட்டத்தில் உரை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆப்கான் தாக்குதலில் இலங்கையரும் உயிரிழப்பு!

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் கடந்தவாரம் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் சர்வதேச பாதுகாப்பு உதவிப் படையில் பணியாற்றிய-பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் கொல்லப்பட்டார். இவர் பிரித்தானிய குடியுரிமை பெற்ற இலங்கையர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் 23 வயதான ஜொனாத்தன் கிதுலகொட என்பவரே கொல்லப்பட்டதாகவும் இவர் நேட்டோவின் கட்டளை அமைப்பில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருப்பி அனுப்பப்பட்ட கோழிக் குஞ்சுகள்!

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 3000 கோழிக்குஞ்சுகள் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆசியப் பிராந்தியத்தில் தற்போது பரவி வரும் பறவைக் காய்ச்சல் காரணமாகவே இந்தக் கோழிக்குஞ்சுகள் திருப்பியனுப்பப்பட்டன.

ஆசியப் பிராந்திய நாடுகளில் இருந்து கோழி மற்றும் கோழி இறைச்சி என்பன இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தடைசெய்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பு!



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் மீண்டும் நேற்றுமுதல் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகமும், பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவும் தமக்கு இழைத்து வரும் அநீதிகளுக்கு எதிராகவே இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தினை ஆரம்பித்திருப்பதாக - யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் தங்கராஜா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஊழியர் நியமனங்களில் காட்டப்படும் பககச்சார்பானதும், செல்வாக்கு அடிப்படையிலான செயற்பாடுகளைக் கண்டித்தும், யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களின் நலன்களில் தொடர்ந்தும் நிர்வாகம் அக்கறையின்றி (12 ஆம் பக்கம் பாாக்க)

## மேலும் நான்கு கட்சிகள் புதிய கூட்டணியில் இணைவு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நேற்று மேலும் நான்கு கட்சிகள் இணைந்துகொண்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பான உடன்படிக்கையில் இந்தக் கட்சிகள் கைச்சாத்திட்டன.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமாலை நடைபெற்ற இந்த நிகழ்வில் - மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, இலங்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

## மனோ-மலிக் குழுவினர் நாளை சந்திக்கின்றனர்

(கொழும்பு)

பிரதமருக்கும் - ஜனாதிபதிக்கும் இடையிலான இணக்கப்பாட்டை ஏற்படுத்த மனோ-மலிக் குழுவினர் நாளை கொழும்பில் கூடி ஆராயவுள்ளனர்.

நாளை காலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

## ஈ.பி.டி.பி வெளியிலிருந்து ஆதரவு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெளியில் இருந்தவாறே ஆதரவு வழங்கப் போவதாக ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது.

இந்த முன்னணியின் ஒரு அங்கமாக இப்போதைக்கு இணைந்து செயற்பட ஈ.பி.டி.பி முன்வந்துள்ளது. எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளை வரவேற்பதாகவும் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், கௌரவமானதும், நிரந்தரமான தீர்வை துரித (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிக்குமாறு பொது அமைப்புகள் வேண்டுகோள்!

## ஈ.பி.ஆர்.எல்.எப் (சுரேஸ் அணி)

சுதந்திரதினமான நாளை வடக்கு - கிழக்கிலுள்ள பகுதி எங்கும் கடைகளை பூட்டியும், அலுவலகங்களைப் பகிஷ்கரித்து, அரச மற்றும் பொது இடங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு இந்த நாளை தமிழ்மக்களின் கரிநாளாக சிங்கள தலைமைக்கும், சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்துவோம்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்எவ் (சுரேஸ் அணி) கோரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திர தினமான நாளை - ஆதரவு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கையின் சுதந்திர தினமென்பது, அது சிங்கள மக்களின் சுதந்திரதினமாக இருந்து வந்ததேயன்றி, 1972 ஆம் ஆண்டு இலங்கையை ஓர் குடியரசாகப் பிரகடனப் படுத்தியபோது, சிறிமாவோ பண்டாரநாயக்கா கொண்டுவந்த அரசியல் சாசனமும், அதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டு வந்த அரசியல் சாசனமும், தமிழ் தேசியத்துக்கு எதிரான வகையில், அவர்களை இந்த நாட்டின் இரண்டாம் தரப்பிரஜைகளாக்கும் விதத்திலேயே உருவாக்கப்பட்டது. இந்த அரசியல் சாசனங்களுக்கும், தமிழர் பிரதிநிதிகளுக்கும், இதை உருவாக்குவதில் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை என்பதும் வெளிப்படையான உண்மையாகும். இந்த அடிப்படையில் சுதந்திர தினமென்பது தமிழர்களுக்கல்ல என்பதும், அதனை நாங்கள் பகிஷ்கரித்து வந்தோம்.

ஒரு தலைப்பட்சமான அரசியல் சாசனங்களை மாற்றி, இந்தநாட்டில் உள்ள சகல இன மக்களும் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும், தனித்துவத்துடனும் வாழக்கூடிய வகையில் ஒரு புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்படவேண்டும். அதன் மூலம் தமிழ்பேசும் மக்கள் தமது சொந்த தாயகத்தில் சுயாட்சியை கொண்டவர்களாக, தம்மைத்தாமே ஆளக்கூடியவர்களாக இருக்கவேண்டும். ஓர் புதிய சமஷ்டி அரசியல் முறை அமைவிலேயே இது சாத்தியமாகும் என்ற அடிப்படையில், தமிழர் தரப்பின் சார்பாக விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இருந்த சமயத்தில், சிங்களத் தலைமை மீண்டும் இந்தப் பேச்சுவார்த்தையைக்குழப்பி நாட்டை மீண்டும் ஓர் யுத்த நெருக்கடிக்குள் தள்ளி வருகின்றனர். சிங்களத் தலைமைகள் தமது அதிகாரப் போட்டியை தீர்த்து, புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்ற சர்வதேச அழுத்தங்களும் கூட எடுபட்டதாகத் தோன்றவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை இன்னும் தூரத்துக் கனவாகவே இருந்து வருகின்றன. எனவே, இதற்கான எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டியதும் எமது கடமையாகும். இந்தநிலையில் - கடைகளைப் பூட்டி, அலுவலகங்களை பகிஷ்கரித்து, வடக்கு - கிழக்கு எங்கும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுவதன் மூலம், சுந்திரதினத்தை தமிழ மக்களின் கரிநாளாக, கறுப்பு தினமாகப பிரகடனப்படுத்துவோம். இதனமூலம் எமது எதிர்ப்பையும், கண்டணங்களையும் சிங்களத் தலைமைக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்துவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம்

பெப்ரவரி நான்காம் நாளை - அரசு சுதந்திரநாளாகத் தமிழ் மக்களின் அவலவாழ்வின் மத்தியில் முன்னெடுக்கவுள்ளது.

மக்கள் இடம்பெயர்ந்து தமது பாரம்பரிய மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் இன்னல்பட்டு வாழவழியற்றுத் தவிக்கும்போது, சுதந்திரநாள் கொண்டாட்டம் அவசியமா?

வலிவடக்கு மக்கள் - சொந்த வீடுகளை, விவசாய நிலங்களை இழந்து தமது சுயதொழிலைச் செய்ய விடாது படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயம் எமது வாழ்க்கையையே, எமது இருப்பையே விழுங்கிவிட்டது. வலிவடக்கு செயலகத்தில் பெப்ரவரி நான்காம் நாள் சுதந்திரதினம் கொண்டாடப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ளவேமுடியாது. அந்த நிகழ்வை முற்றாக நிராகரிக்கிறோம்.

எமது மண் எங்கோ எட்டமுடியாத கானல் நீராக கற்பனையில் மட்டும் இருப்புக்கொள்வதா? நாம் எமது சொந்த முகவரிகளை இழந்து கண்ணீர்விடுகிறோம். அடிப்படை மனித உரிமைகளை மீறிநிற்கும் உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படும் போதுதான், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான பாதை திறக்கும். அது வரையில் நிரந்தர சமாதானம் எட்டாக்கனியாகவே இருக்கும்.

பெப்ரவரி நான்காம் நாள் சுதந்திரதினமாகக் கொண்டாடுவதற்கு ஏற்ற நாளல்ல என்பதையும், அது இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு துக்கநாள் என்பதையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். ஆக்கிரமித்து நிற்கும் படையினரை அகற்றி, சமாதானத்தின் மீதான பற்றுதலைக் கட்டியெழுப்ப அணைத்துலக சமூகமும் கூட்டுமுயற்சி எடுக்கட்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

நாளை நடைபெறவிருக்கும் சுதந்திரதினத்தைப் புறக்கணிக்க வேணடுமென, யாழ்.குடாநாட்டு பொது அமைப்புக்கள் எடுத்துள்ள தீர்மானத்தை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசமும் வரவேற்றுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, சிங்கள ஆட்சியாளர்களாலும், பேரினவாதிகளாலும் தமிழர்கள் ஒடுக்கப்பட்டுவந்துள்ளனர். இலங்கை சுதந்திரமடைந்தபோது, தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை, உரிமை கிடைக்கவில்லையென தமிழ்த்தலைவர்கள் அன்று குரல் எழுப்பினார்கள் - பலனேதும் கிட்டவில்லை.

இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் சுதந்திரம் பெறவில்லை. சுதந்திரததைப் பெறப் போராடுகின்றார்கள். தமிழர்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கும்வரை சுதந்திரதினத்தை தமிழ்மக்கள் பகிஷ்கரிகக வேண்டும். அதேவேளை, கூட்டுறவாளரும், கூட்டுறவுப் பணியாளர்களும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து, எமது உணர்வலைகளை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வளவு இரத்தம் சிந்திய பிறகும் இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர சிங்கள ஆட்சியாளர்கள் பின்நிற்பது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும், அது அழிவுக்கே வழிவகுக்கக் கூடியது.

நாளை கொண்டாடவிருக்கும் சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிப்பதன் மூலம் - அரசுக்குப் புரியவைக்க, அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச சங்கங்களும் தமது செயற்பாடுகளையும் முடக்கிவைக்குமாறு ஒன்றியம் மேலும தெரிவித்துள்ளது.

## வடமராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம்

இலங்கையின் சுதந்திரதினத்தை துக்கதினமாக இனவாத அரசுக்கு எதிராக அனுஷ்டிக்குமாறு வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தமிழர் தாயத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள், வெதுப்பகங்கள் மற்றும் வாகனங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டு சுதந்திர நாளுக்கு எதிராகவும், இனவாத அரசுக்கு எதிராகவும் எதிர்ப்பை தெரிவிக்குமாறு கேட்டுள்ளது.

(116)


ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2197)

நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், கிரண் நடித்த
வின்னர்
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
How To Lose A Guy In 10 Days
(சி-2196)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)


# கோப்பாய் கோட்ட மட்டத்தில் இன்று நடைபெறும் போட்டிகள்!

கோப்பாய் கோட்ட மட்டத்தில் நடைபெற்று வருகின்ற வலைப் பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்றைய போட்டிகள் காலை 8.30 மணி முதல ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு:-

17 வயது பிரிவில் - இடைக்காடு மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியும்,

15 வயதுப்பிரிவில் - ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியை எதிர்த்து சோமஸ்கந்தா கல்லூரி அணியும்,

15 வயதுப்பிரிவில் - அச்சுவேலி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இடைக்காடு மகா வித்தியாலய அணியும்,

15 வயதுப்பிரிவில் உருப்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து ஊரெழு கணேசா வித்தியாலய அணியும்,

17 வயதுப்பிரிவில் - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து ஊரெழு கணேசா வித்தியாலய அணியும்,

17 வயதுப்பிரிவில் -சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியும்,

17 வயதுப்பிரிவில் - அச்சுவேலி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியால அணியும்,

19 வயதுப்பிரிவில் - ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து புனித திரேசா மகளிர் கல்லூரி அணியும்,

19 வயதுப்பிரிவில் - இடைக்காடு மகா வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியும் மோதவுள்ளது.

பி.ப. 1.30 மணி முதல் நடைபெறும் கரப்பந்தாட்டப் போட்டிகளின் விபரம் பின்வருமாறு:-

15 வயதுப் பிரிவில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியும்,

15 வயதுப் பிரிவில் - இடைக்காடு மகா வித்தியாலய அணியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரி அணியும்,

17 வயதுப் பிரிவில் - ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து இடைக்காடு மகாவித்தியாலய அணியும்,

17 வயதுப் பிரிவில் - ஊரெழு கணேசா வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியும்

19 வயதுப் பிரிவில் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளது. (58)

### சனசமூக நிலைய புதிய மாடிக்கட்டடத்திறப்புவிழா

கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் கோவிலடி சனசமூக நிலையத்திற்கான புதிய மாடிக் கட்டடம் நாளை மறுதினம் வியாழக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது கடந்த கால யுத்த நடவடிக்கைகளில் இந்தக் கட்டடம் சேதமாக்கபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# ஏழைகளின் கல்விக்குத் தடைபோடும்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு ஆறு தொடக்கம் உயர் வகுப்புக்களில் கற்பதற்கும் பிரசித்தி பெற்ற பாடசாலைகள் என்ற பெயரைக் கொணடிருக்கும் பல பாடசால்லைகளும் இவ்வாறாக மனச்சாட்சியற்ற வகையில் பெருந்தொகைப் பணத்தை அறவிட்டுவருகின்றன.

இவ்வாறு அறவிடப்படும் பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, எதற்காகப் பயன்படுத் தப்படுகிறது என சில பாடசாலைகள் உரிய முறையில் கணக்குகளை வெளியிடுவதில்லை எனவும், பாடசாலை அபிவிருத்திசசங்கம், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் முதலானவற்றைத் தமக்குச் சார்பானவர்களைக கொண்டு நிரப்பி வைத்திருக்கும் சில பாடசாலை அதிபர்கள், அந்தப் பணத்தைப் பல்வேறு வகையில் தமது விருப்பப்படி செலவு செய்வதாகவும், சில பெரிய பாடசாலைகள்மீது பெற்றோர் குற்றம் சுமத்திவருகின்றனர்.

இந்த விடயம் குறித்து கல்வித்திணைக்கள வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது - டொனேசனுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது எனவும், அந்தப் பாடசாலைகளின் விருப்பப்படி அவை அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கூறி அவர்கள் தப்பித்துக்கொள்வது முறையற்ற செயல். ஏனெனில், இலவசக்கல்வி நடைமுறையிலுள்ள ஓர் ஜனநாயக நாட்டில், 'டொனேசன்' என்ற பெயரைப் பயன்படுத்தி வசதிபடைத்த கல்வியறிவுடைய சமூகத்தைச் சேர்ந்த அல்லது ஆற்றல்மிக்க பிள்ளைகளை மட்டுமே தமது பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ள விரும்புவது - பாடசாலைச் சேவை என்பதை விட, ஒரு கௌரவமான வியாபாரம் போன்றே கருதப்பட வேண்டியுள்ளது.

பாடசாலைகள் சேவையாற்றுவனவாக இருந்தால், ஆசிரியர்கள் சமூகத்தில் பற்றுடையவர்களாக இருந்தால் - சமூகத்தில் அடிமட்டத்திலுள்ள பாடசாலை செல்ல வசதியற்ற, போரினால் பாதிக்கப்பட்ட, கல்வி வாசனையற்ற பெற்றோரை உடைய பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து, முன்னேற வழிசெய்ய வேண்டும். இவர்களுக்கே சேவை செய்ய வேண்டும்.

அதைவிடுத்து, பாரிய 'டொனேசன்' செலுத்திப் பெரிய பாடசாலை நாடிவரும் பிள்ளைகள், பாடசாலைகளில் கற்பதென்பது மிகக்குறைவு. தனியார் கல்வி நிறுவனங்களையே அவர்கள் பெரிதும் பயன்படுத்துகிறார்கள். அங்கேயே தமது கல்வியை வளர்த்துக்கொள்கிறார்கள். பெறுபேறுகள் வெளியாகும்போது, தமது பாடசாலைகளின் பெறுபேறுகளைப் பத்திரிகைகள் முன்னிலையில் பிரசுரிக்கவேண்டுமென நினைப்போருக்கு அத்தகைய மாணவர்களே அதிகம் தேவைபபடுகின்றர்.

இந்தநிலை மாறவேண்டும். மீண்டும் கல்விக்காகப் புரட்சி செய்ய வேண்டியநிலை தோன்றக்கூடாது. தமிழ் மக்களின் உரிமைக்காக எத்தனையோ போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். இந்த 'டொனேசன்' என்ற கல்வித்தடையும் விரைவில் நீங்குவதற்கு யாழ்ப்பாண மக்கள் விழிப்புடன் செயற்படல்வேண்டும்.

குறிப்பாக வன்னியிலிருந்து மீளக் குடியேறிய பல வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்கள் - 'டொனேசன்' செலுத்தமுடியாமல் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்திருப்பதுடன், வேலைகளுக்கும் அனுப்பத் தொடங்கியுள்ளனர்.

சிறுவர் பாதுகாப்பு அமையம், ஐ.நாவிற்கான சிறுவர் பாதுகாப்பு அமைப்பு, சிறுவர் நலன் காப்பகம் போன்றவற்றுடன் பல அரச சார்பற்ற நிறுவனங்களும் - மாணவர்கள் நலன பேணும் வகையில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவை ஏன் இந்த விடயத்தில் அக்கறை செலுத்துவதில்லை. இந்த விடயத்தைக் கருத்தில்கொண்டால், யாழில் பாடசாலை செல்லாது வீடுகளில் நிற்கும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் எதிர்காலம் வெளிச்சமாகும்.

கல்வித்திணைக்களம், மற்றும் தமிழ் மீதும், தமிழர் மீதும் பற்றுக்கொண்ட அனைவரும் இதில் கவனம் எடுத்து, உரிய நடவடிக்கை எடுத்து, ஏழைகளின் கல்வி வறுமையை நீக்க முன்வரவேண்டும்.

இந்த வருடத்திற்குப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட புதிய மாணவர்களையும், அவிரிகளிடம் அறவிடப்பட்ட டொனேசனையும் எழுமாறாக யாழ்.நகரிலுள்ள மூன்று பாடசாலைகளை எடுத்து ஆராய்ந்து பார்த்தால், பல திடுக் கிடவைக்கும் தகவல்கள் வெளிவரும் என் பதில் ஐயமில்லை.

எனவே, ஏழைகளுக்கு வாழ்வு வழங்க அறிமுகமான இலவசக்கல்வியை - விலைக்கு விற்கும் இடைத்தரகர் கூட்டத்தை ஒழிக்கும் பாரிய பொறுப்பு அனைவரினதும் கையில் உண்டு என்பதை யாரும் மறந்து விடாது, உடன் செயற்படத் தொடங்குவீர்.

# புலிகள் மீதான அவதூறான கருத்துக்கள் சர்வதேச சமுகத்தில் பிசுபிசுத்து வருகிறது

## விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடு தெரிவிப்பு

புலிகள் இயக்கம் தொடர்பாக சிங்கள அரசாங்கம் புனைந்து பரப்பிய அவதூறு கருத்துக்கள - சர்வதேச அளவில் படிப்படியாக பிசுபிசுத்துப்போகும்நிலை தோன்றியுள்ளதென தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான, விடுதலைப் புலிகள் தைமாத இதழில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புலிகள் இயக்கம் தொடர்பாக சிங்கள அரசாங்கம் முன்னர் புனைந்து பரப்பிய அவதூறான கருத்துக்கள், சர்வதேச அளவில் படிப்படியாக பிசுபிசுத்துப்போகும் நிலை தோன்றியுள்ளது. போர் வெறியர் சமாதான விரோதிகள் என்று, விடுதலைப் புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு அள்ளியிறைத்த அரசியல் அவதூறுகளை உண்மையென மேற்கு நாடுகள் முன்னர் நம்பியிருந்தன.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டு கால சமாதான நடவடிக்கைகளில், புலிகள் இயக்கம் காட்டிவரும் சமாதான விருப்பு நெகிழ்ச்சிப் போக்குக்கு நேர்மையான அணுகுமுறைகளும், அரசியல் இராஜ தந்திரசெயற்பாடுகளும் மேற்கு நாடுகள் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தை தகர்க்க உதவியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், தமிழீழ தேசியத் தலைவர் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை, சிறிலங்கா அரசாங்கம் முழுமையாக நடைமுறைப் படுத்தாத போதும், புலிகள் இயக்கம் சமாதான பேச்சுக்களை முறித்துக் கொள்ளவில்லை. மாறாக சிங்கள அரசாங்கத்துக்கு கால அவகாசங்களை வழங்கி, விட்டுக்கொடுப்புக்களைச் செய்து சமாதான முயற்சியை உயிர்த் துடிப்புடன் வைத்திருக்க, புலிகள் இயக்கம் உதவியது. போர்நிறுத்த காலத்தில் புலிகளின் வணிகக் கப்பலை சிங்கள கடற்படை தாக்கியழித்த நிலையிலும் புலிகள் பொறுமை காத்தனார்.


தமிழீழ கடற்பரப்பில் போராளிகள பலரின் சாவுக்கு, சிங்களக் கடற்படை காரணமாக இருந்தபோதிலும், சமாதான முயற்சிகளை குழப்பியடிக்க புலிகள் முயலவில்லை.

அண்மையில் ரணில் அரசாங்கத்தின் அமைச்சுப்பொறுப்புக்களை, சந்திரிகா அம்மையார் பறித்தெடுத்த கையோடு, நாடு முழுவதும் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தி, ஒரு பதட்ட நிலையைத் தோற்றுவித்திருந்தார். இதற்குப் பதிலடியாக ஏ-9 பாதையை மூடி புலிகள் சமாதானப் பேச்சுக்களை முடித்துக் கொள்ளப் போகிறார்கள் என்று உலக நாடுகள் நினைத்திருந்தன.

ஆனால், புலிகள் இயக்கம் பொறுமை இழக்கவில்லை. சமாதானத்தை ஏற்படுத்தப் பாடுபடும் சர்வதேச சமுகத்துடன் இணைந்து, புலிகள் இயக்கம் சமாதானச்சுடரை அணையவிடாது பாதுகாத்து, சமாதானத்தை குழப்பியடிக்கும் வகையில் சிங்கள தரப்பு பலதடவைகள் நடந்துகொண்டபோதும், அவற்றுக்குப் பதிலடியாக புலிகள் இயக்கம் காட்டிய அரசியல் முதிர்ச்சியும், விவேகமான செயற்பாடுகளும் சர்வதேச சமுகத்தை வெகுவாக கவர்ந்துள்ளன.

இது காரணமாக உலக நாடுகளின் பல பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் கிளிநொச்சிவந்து புலிகளின் தலைமைப் பீடத்தை சந்தித்து, கருத்து பரிமாறும் அளவுக்கு புலிகள் மீதான மதிப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





நாளை நடைபெறவுள்ள சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் அணி வகுப்பில் பங்கேற்கும் இராணுவ விசேட படையினரை முதற்படத்திலும், ஆட்லறிகளைப் படையினர் ஒழுங்குபடுத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# அடுத்தமாதம் முதலாம் திகதி புலிகள் தமிழீழப் பிரகடனமாம்

## திவயின வார இதழ் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி - தமிழீழப் பிரகடனத்தைப் புலிகள் முன்வைக்கவுள்ளனர் என 'திவயின' சிங்களப் பத்திரிகை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

முற்பக்கச் செய்தியாக வெளியிடப்பட்டிருக்கும் இந்தச் செய்தியில், மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும், ஏனையோரும் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டு சென்றுள்ளார்கள். அவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தமிழீழப் பிரகடனத்தை மேற்கொள்வதற்காகவே இந்தச் சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டனர்.

இவர்கள் தமிழீழப் பிரகடனத்தினை அறிவிப்பதற்கும், தனிநாட்டு நிர்வாகத்தை அமைப்பதற்கும் வேண்டிய நிதி மற்றும் ஆதரவுகளைத் திரட்டுவதற்காகவே, ஐரோப்பிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் ஆலோசகர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்திவருகின்றனர்.

அவர்களிடம் தமது நிர்வாக முறைகளைப்பற்றி எடுத்துக்கூறி, வடக்கு- கிழக்கு நிர்வாகத்தின் முழுப்பொறுப்பையும் முன்னின்று நடத்துவதற்கு வேண்டிய நிதியை தனியாகப் பெற ஏற்பாடு செய்துவருகினறனர்.

கிளிநொச்சி, கரடியனாறு பிரதேசங்களில், பிரதேசசெயலகங்களை நிறுவி, அதனூடாக இந்த நிர்வாகத்தை நடத்த எண்ணியுள்ளனர்

இதற்காக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் போன்ற செயற்பாட்டாளர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். அவர்களது நிர்வாகத்தில் 20 அலகுகள் செயற்படவுள்ளன. வங்கி, நீதி, நிர்வாகம் என அவை பிரிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் துணையுடன் தனித் தமிழீழத்தை புலிகள் நடத்தவுள்ளனர் எனவும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (01)

# பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த நகல் விரைவில் இந்தியாவிடம் கையளிப்பு!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத்

(கொழும்பு)

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த திட்ட நகலை, அரசு இந்திய அரசாங்கத்திடம் விரைவில் கையளிக்கவுள்ளது.

இந்தத் தகவலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

இரு நாடுகளுககும் இடையிலான பாதுகாப்புக் குறித்து, அண்மையில் இந்தியா சென்றிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் அரச உயர்மட்டக் குழுவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதன்போது ஏற்பட்ட இணக்கப்பாட்டுடன், அரசாங்கத்தின் புதிய ஆலோசனைகள் அடங்கிய திட்ட நகல் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது. இந்த திட்ட நகல் தயாரிக்கப்பட்டதும் இந்திய அரசாங்கத்திடம் கையளிக்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தின்மூலம், படையினருக்கு பயிற்சி வழங்குதல், புதிய விமானங்கள், கப்பல்களை இலங்கை அரசாங்கத்திற்கு விற்பனை செய்வதற்கும், இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

# கிறிஸ்தவ தேவாலயத் தாக்குதலுக்கு நடவடிக்கை எடுக்காமையினால் பதவியிலிருந்து பொலிஸ் நீக்கம்

(கொழும்பு)

மெத்தகொட என்ற இடத்தில் - கிறிஸ்தவ ஆலயம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, பொலிஸ் ஆணைக்குழுவினால் டபிள்யூ.எ.நவரட்ண என்பவர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆலயம் தாக்கப்பட்டமை தொடர்பாக இவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்று குற்றம் சுமத்தியே இவர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பௌத்த குழு ஒன்றே இந்த கிறிஸ்தவ ஆலயத்தினைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. 100 இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ ஆலயங்கள் இதுவரை தாக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

# சமாதானப்பேச்சு வெற்றிபெற்றால் புலிகளின் நிர்வாகம் அரசுக்குள்!

## காணி அமைச்சர் தெரிவிப்பு

சமாதான பேச்சுக்கள் வெற்றிபெற்றால், புலிகளின் நிர்வாக அமைப்புக்கள் யாவும், அரச நிர்வாகத்தினுள் உள்வாங்கப்படும் என காணிஅமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றியபோது -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு பிரியாமல் இருக்கவேண்டும். மூவின மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்ற எண்ணப்பாட்டில் உறுதியுடன் உள்ளார். அதற்காக அவர் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றிவருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை, காவல்துறை, வங்கி மற்றும் பல்வேறு நிர்வாகத்துறைகள் செயற்பட்டு வருகின்றமை பற்றி, பல்வேறு விமர்சனங்கள் எழுகின்றன. அவர்கள் தமது பகுதியில் நிர்வாகத்தினை ஒழுங்கமைக்கவே இந்த நிர்வாக முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

சமாதான முயற்சிகள் வெற்றிபெற்று ஒரு தீர்வு நிலை நாட்டப்படுமானால், விடுதலைப் புலிகளின் நிர்வாக செயற்பாடுகள்யாவும் அரசாங்கத்துடன் இணைக்கப்படும்.

அவர்களின் சகல நீதிநிர்வாக, சட்ட, வங்கிச்சேவைகளும் இலங்கைச் சேவைகளுடன் உள்ளீர்க்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியல் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டாலும் பொருளாதாரத்தை சிரமப்பட்டு காத்தோம்

## பிரதமர் ரணில் கூறுகிறார்

பாரிய அரசியல் நெருக்கடியை ஜனாதிபதி சந்திரிகா தோற்றுவித்துள்ள போதிலும், பொருளாதாரம் வீழ்ந்துவிடாதிருக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மிகவும் சிரமப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பதுளை - ஹாலிஎல என்னுமிடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

கடந்த நவம்பர் மாதத்திற்குப் பின்னர் யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்தும், மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

சமாதானத்தை ஏற்படுத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவே மக்கள் எமக்கு ஆணையைத் தந்துள்ளார்கள்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை நிறுத்தியிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள், கடந்த இரு வருடங்களாக முதலீகளை மேற்கொள்கின்றனர்.


நாட்டின் சகல பகுதிகளிலும் வர்த்தக நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஓரளவு வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

சமாதானம் காரணமாகவே இவ்வாறு வளர்ச்சியை ஏற்படுத்த முடிந்தது. எனினும், கடந்த நவம்பர் மாதம் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக பங்குச்சந்தையில் மாத்திரம் சுமார் 800 கோடி ரூபா வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கோதுமை மா மற்றும் எரிபொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறு பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக பெரும் முயற்சியை எடுத்துவருகிறோம்.

மீண்டும் ஓர் தேர்தல் வந்தால், சக்திமிக்க அரசொன்றை ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (01)

# தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி ஏழு விக்கெட்டுக்களால் தோல்வி!



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையில் செஞ்சூரியன் பார்க்கில் நேற்றுமுன்தினம் நடந்த சர்வதேச ஒருநாள் போட்டியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

தென்னாபிரிக்க அணி வீரர்கள் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி பெரியதொரு இலக்கினை வைத்தனர். இதில் தென்னாபிரிக்கா 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 297 ஓட்டங்களைப் பெற்றது.

அணித் தலைவர் ஸ்மித், 46 ஓட்டங்கள் பெற்று ஆட்மிழந்தார். கலிஸ், குளுஸ்னர் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 95, 41 ஓட்டங்களைப் பெற்றனர். இந்த மூவரும் அணிசார்பில் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் டிலான், கைல், ராம்பவல் சர்வான் ஆகிய நால்வரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



பெரியதொரு இலக்குடன் ஆடத்தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, மிகவும் சிறப்பான முறையில் - அனைவருக்கும் அதிர்ச்சி தரக்கூடிய வகையில் துடுப்பெடுத்தாடி, 45 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த 45 ஓவர்களில் மேற்கிந்திய வீரர்களினால் 29 பவுண்டரிகளும், ஐந்து சிக்ஸர்களும் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கைல் 22 பந்துகளில் 26 ஓட்டங்களையும் சந்திரபோல் 75 பந்துகளில் 92 ஓட்டங்களையும் றிக்காடோ பவுல் 34 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

அதன்பின்னர் சர்வான் 102 பந்துகளில் 77 ஓட்டங்களுடனும், லாரா 37 பந்துகளில் 59 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ஷோன் பொலக் 2 விக்கெட்டுக்களையும், கலிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நடந்துமுடிந்த நான்கு போட்டிகளில் தென்னாபிரிக்கா 2 போட்டிகளில் வெற்றிபெற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு போட்டியில் வெற்றிபெற்றும் உள்ளன. மழை காரணமாக ஒரு போட்டி கைவிடப்பட்டது. இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

# இந்தியாவுடனான போட்டி சவாலாகவே இருக்கும்!

## பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் அக்தர்

(இஸ்லாமாபாத்)

இந்திய கிரிக்கெட் அணி மார்ச், ஏப்ரல் மாதங்களில் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாட உள்ளது. 15 ஆண்டு இடைவேளைக்கு பிறகு டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி செல்கின்றது. இந்திய அணி பாகிஸ்தானுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாடும். இந்தச் சுற்றுப் பயண விபரம் எதிர்வரும் 10 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான தொடர் பாகிஸ்தானுக்கு சவாலாக இருக்கும் என்று பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் கூறினார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது.

இந்தியாவுக்கு எதிரான தொடர் மிகவும் முக்கியமானது. இந்த தொடரில் விளையாடுவதை நான் விரும்புகிறேன். நான் மட்டும் முக்கிய பங்காக இருப்பேன் என்று கூற இயலாது. வீரர்களின் கூட்டு முயற்சியே வெற்றியைப் பெற்றுத்தரும்.

இந்தத் தொடர் பாகிஸ்தானுக்கு சவாலாக இருக்கும். முக்கியமான இந்தத் தொடரில் அனைத்து வீரர்களும் சிறப்பாக விளையாட வேண்டும். கடுமையாகப் போராடினால் தான் இந்திய அணியை வெற்றிகொள்ள முடியும். பாகிஸ்தான் அணியில் எந்த குழு மோதலும் இல்லை, வீரர்கள் அனைவரும் ஒற்றுமையாக உள்ளனர் எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் இந்தியா வந்தபோது அக்தரின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது.

இந்திய அணி சமீபத்தில் அவுஸ்ரேலியாவை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடித்து டெஸ்ட் தொடரை சமன் செய்தது. இதனால் இந்திய அணி பாகிஸ்தானுடன் மோதும் போட்டி மேலும் விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் இந்தியாவுக்கே வெற்றி வாய்ப்பு!

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பயணத்தில் இந்திய அணிக்கே அதிகப்படியான வெற்றிவாய்ப்பு இருக்கிறதென பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. இரு அணிகளும் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் மோத இருக்கின்றன.

அவுஸ்ரேலியப் பயணத்தில் சாதித்தன் மூலம் இந்திய அணி மீதான நம்பக்கை வெகுவாக உயர்ந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு எதிராக மக்ரா விளையாடுவார்!

அவுஸ்ரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மக்ரா, கடந்த ஆண்டு ஜூலை மாதம் கணுக்காலில் சத்திர சிகிச்சை செய்து கொண்டார். இதனால் இவர் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் வரை ஆடவில்லை. உடல் தகுதியுடன் இல்லாததால் 3 நாடுகள் போட்டியில் கூட அவர் ஆடவில்லை.

இந்நிலையில் இலங்கைக்கான தொடரில் மக்ரா இடம்பெறுவார் என்று தெரிகிறது. இதற்காக அவர் வரும் 9 ஆம் திகதி நடைபெறும் உள்ளூர் ஆட்டத்தில் விளையாடுகிறார். அவுஸ்ரேலியா இந்த மாதக் கடைசியில் இலங்கைக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் மார்ச் மாதம் 8 ஆம் திகதி காலி மைதானத்தில் தொடங்குகிறது.

இதேபோல் அவுஸ்ரேலியா முன்னணி சூழல் பந்து வீச்சாளர் வோர்னும் இந்தத் தொடரில் இடம்பெற வாய்ப்புள்ளது.

உலக் கோப்பை போட்டியின்போது போதை மருந்து உட்கொண்டதாகக் கூறி அவருக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இந்த தடை இந்த மாதம் முடிவடைகிறது. விளையாட முழு உடல் தகுதியுடன் இருந்தால் வோர்ன் அவுஸ்திரேலிய அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என ஊகிக்கப்படுகிறது.

# விளையாட்டு

# நெடுந்தீவு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் 2004 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல 1.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் கா. கிருஸ்ணதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ராதா கிருஷ்ணன் கலந்து கொள்வார்.

இடைவேளையின்போது மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சியும் இடம்பெறும்.(113)

# அ.தி.மு.கவுடனான கூட்டணி குறித்து அத்வானி சென்னையில் ஆலோசனை!



(சென்னை)

அ.திமு.க. - பா.ஜ.க. கூட்டணி குறித்து சென்னையில் துணைப் பிரதமர் அத்வானியும், முதலமைச்சர் ஜெயலலிதாவும் ஆலோசனை நடத்தினர். இந்தச் சந்திப்பு 2 மணி நேரம் நீடித்தது.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்கேற்பதற்காக துணைப் பிரதமர் அத்வானி நேற்றுமுன்தினம் சென்னை வந்தார்.

விழா முடிவடைந்ததும் அத்வானிக்கு முதலமைச்சர் ஜெயலலிதா விருந்து கொடுத்தார். சென்னை போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் வீட்டில் இந்த விருந்து நடைபெற்றது.

வரவேற்பு முடிந்ததும் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பில் மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், பா.ஜ.க. அகில இந்தியச் செயலாளர் இல.கணேசன், தேசிய செயற்குழு உறுப்பினர் சுகுமாறன் நம்பியார், தமிழக பா.ஜ.க. தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. அமைத்துள்ள கூட்டணி பற்றியும் தொகுதிப் பங்கீடு பற்றியும் அவர்கள் பேசியதாகத் தெரிகிறது.

போயஸ் கார்டனில் இருந்து புறப்படும்போது துணைப் பிரதமர் அத்வானி ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது -

நீண்ட நாட்களுக்குப் பின்னர் போயஸ் கார்டன் வந்துள்ளேன். முதலமைச்சர் ஜெயலலிதா அளித்த விருந்து மகிழ்ச்சியைத் தந்தது. இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றிப் பேசினோம். எங்கள் கூட்டணித் தொகுதிப் பங்கீட்டில் எந்தப் பிரச்சினையும் எழவில்லை.

நாட்டு மக்கள் இதுவரை 7, 8 பிரதமர்களைப் பார்த்துவிட்டனர். அத்தனைபேரையும் விட மிகச் சிறப்பானதும் நிலையானதுமான ஆட்சியை வாஜ்பாய் அரசுதான் தந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. தொடர்ந்து எங்களால்தான் நல்லாட்சி தரமுடியும்.

மத்தியில் மீண்டும் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான அரசு ஆட்சியமைக்கும் என்பதில் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். மக்கள் மீண்டும் பிரதமர் வாஜ்பாய் ஆட்சியமைக்கும் வகையில் வாக்களிப்பார்கள் என நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.

# விடுதலை சிறுத்தைகள் அமைப்புடன் புதிய தமிழகம் இணைந்து செயற்படும்!

## திருமாவளவன், கிருஷ்ணசாமி கூட்டாக அறிவிப்பு



(சென்னை)

புதிய தமிழகம் கட்சி, விடுதலை சிறுத்தைகள் அமைப்பு ஆகியவை இணைந்து செயற்படும் என்று டாக்டர் கிருஷ்ணசாமி, திருமாவளவன் ஆகியோர் கூட்டாக அறிவித்தனர்.

புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, விடுதலை சிறுத்தைகள் இயக்க அமைப்பாளர் திருமாவளவன் ஆகியோர் நேற்று கூட்டாக சென்னையில் நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். அவர்கள் அங்கு கூறியதாவது -

எளிய மக்களுக்காகப் பாடுபட்டு பெரு இயக்கமாகச் செயற்படும் விடுதலை சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகிய இரண்டு இயக்கங்களும் சமூக அரசியல் தளத்தில் இணைந்து செயற்பட முடிவுசெய்துள்ளோம்.




பத்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் வேரூன்றியவை இந்த அமைப்புகள். இக்கட்டான காலகட்டத்தில் பலரும் ஏமாற் றியபோது தி.மு.கவுக்கு உறுதுணையாக இருந்தவை இந்த இரண்டு இயக்கங்கள்.

அப்படிப்பட்ட இந்த இயக்கங்களை வஞ்சம் தீர்ப்பதுபோல் கூட்டணியில் சேர்க்காமல் எங்களை எதிரிகள்போல் கருணாநிதி சித்தரித்துவிட்டார். அவருடைய தலித் ஆதரவு வேடம் கலைந்துவிட்டது.

எங்கள் மீது தரமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தும் அவரை நாங்கள் கண்டிகிறோம். முதுகுளத்தூர், கீழ்வெண்ணி, கொடியன் குளம் போன்ற சம்பவங்களையெல்லாம் அவரின் ஆட்சிக்காலத்தின்போது தடுத்திருந்தால் எங்கள் இயக்கம் தோன்றியிருக்காது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் 7 தொகுதிகள் ஒதுக்கியிருப்பதாக அவர் கூறினார். அவர் ஒதுக்கிய 7 தொகுதிகளும் தனித் தொகுதிகள். எனவே, அவர் ஒதுக்கித்தான் ஆகவேண்டும். பொதுத் தொகுதிகளில் தலித் இனத்தவருக்கு அவர் தொகுதி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறாரா?

இனி எங்களுக்கு தொகுதி ஒதுக்கித் தருவதாக அறிவித்தாலும் அவரது கூட்டணியில் நாங்கள் சேரப்போவதில்லை. வாழ்நாளில் அந்தத் தவறை இனிச் செய்யமாட்டோம். கருணாநிதியையும் சந்திக்கமாட்டோம். எதிர்காலத்தில் நாங்கள் இணைந்து செயற்படுவோம் எனத் தெரிவித்தனர்.



எதிர்வரும் வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ள நீராவியடி வீரகத்தி விநாயகர் கோயிலின் இராச கோபுரத்தைப் படத்தில் காணலாம்.

# விவசாயம், மீன்பிடி அபிவிருத்திக்கு இந்தவருடம் விசேட திட்டங்கள் அமுல்!

## மக்கள் வங்கியின் மேலதிக முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு மக்களுக்கு ஊக்குவிப்புக கடன் உதவிகள் வழங்க, இந்த வருடம் விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், மக்கள் வங்கியின் மேலதிக பொது முகாமையாளர் ஜெ.மாட்டின் ,பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்கள் வங்கியின் செயறபாடுகள் எவ்வாறு இருக்கின்றன, மக்கள் வங்கிமூலம் பொதுமக்கள் எதிர்பார்க்கும் தேவைகள் குறித்து ஆராய்வதற்கே நான் யாழ்.குடாநாட்டுக்கு வந்தேன்.

இங்குள்ள நிலைமைகளை ஆராய்கின்றபோது, கடன் எடுப்பவர்களின் வீதத்தை விட, மக்கள் வங்கியில் வைப்புச் செய் பவர்கள் தொகைதான அதிகமாக இருக்கின்றது. மக்கள் வங்கியின் யாழ்.மாவடடக் கிளைகள் எங்கும் தற்போது நகை அடைவு வைத்துப் பணம் பெறறுக் கொள்ளமுடியும்.

மக்கள் வங்கியின் ஊடாக மக்களுக்குக் கிடைக்கவேண்டிய சேவைகள், எதிர்கால விஸ்தரிப்புகள் தொடர்பாக மக்கள் வங்கியின் முகாமையாளருக்குக் கூறவேண்டிய கடமை என்னிடம் உள்ளது. குறிப்பாக, கடற்தொழில், விவசாயம் போன்ற தொழில்களைச் செய்பவர்களுக்கும், இவ்வாறான தொழில்களை ஆரம்பிப்பதற்கும், மக்கள் வங்கிமூலம் கடன் வசதிகளைப் பெறும் தொழிலாளர்களின் தொழில முயற்சிக்கும் மேலும் கடன்கள் வழங்கப்படும்.

மக்கள் வங்கியின் முக்கிய இலக்கு - மக்களை வளர்ப்பதும், அவர்களுக்கு உதவிகளை வழங்குவதுமாகும். மீன்பிடி, விவசாயம் போன்ற துறைகளில் சென்ற வருடம் கடன்களைப் பெற்றுக்கொண்டவர்களும், குறித்த தவணையில் மீளச் செலுததியுள்ளனர். இது வரவேற்க வேண்டிய விடயமாகும் என மேலதிக முகாமையாளர் தெரிவித்தார். (தீ)

# நகரப்பகுதி பாடசாலை அதிபருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள ஆண்கள் பாடசாலை ஒன்றின் அதிபருக்கு எதிராக பத்துக்குமேற்பட்ட முறைப்பாடுகள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியை ஒருவரை தாக்கியமை, ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை வழங்காது இருந்தமை, மாணவர்களை அவமதித்தமை, அளவுக்கு அதிகமான தண்டனைகளை வழங்கியமை, பாடசாலை வளவில் நடைபெற்ற கட்டடப் பணிகளை மேற்கொண்ட ஊழியர்களுக்குரிய சம்பளப் பணத்தை வழங்காமை என அதிபர்மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



கன்னாதிட்டியில் அமைந்துள்ள மக்கள் வங்கியில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. அதில், கலந்துகொண்டோரைப் படத்தில் காணலாம்.

# பட்டப்படிப்பிற்கான சலுகைகளை யாழ்.பல்கலை மீளவும் வழங்கவும்

## டிப்ளோமா ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்வியற் கல்லூரிகளில் பட்டம் பெற்று வெளியேறியோருக்கு - யாழ்.பல்கலைக்கழகத்தில் இதுவரை வழங்கப்பட்டு வந்த பட்டப்படிப்பிற்கான சலுகைமுறை தொடர்ந்தும் பேணப்படவேண்டும் என வடமாகாண தமிழ் தேசிய கல்வியற் கல்லூரி டிட்ளோமா ஆசிரியர் சங்கம் கோரிகைை விடுத்துள்ளது.

அவர்களது கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பரீட்சையில் தோற்றும் கல்வியியல் கல்லூரியில் டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு, கலைமுதல் தேர்வில் தோற்றவேண்டியதேவை இருக்கவில்லை. அவர்கள் பி.ஏ பகுதி-1, பி.ஏ பகுதி-2 முதலிய பரீட்சைகளில் சித்தியடைந்தாலேபோதும் என்ற வரையறை இருந்தது.

எனினும் மீண்டும் அவர்கள் கலைமுதல் தேர்வு உட்பட அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றவேண்டும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.புல்கலைக்கழகத்தின் இந்த அறிவிப்பானது - தேசிய கல்வியற் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறிய ஆசிரியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன், தமது டிப்ளோமா பட்டத்தைப் பெறுமதியற்றதாக்கியிருக்கிறது.

எனவே, மீண்டும் முன்னர் அளித்துவந்த சலுகையடிப்படையில் பரீட்சைக்குத் தோற்ற, ஆவன செய்யுமாறு வடமாகாண தேசிய கல்வியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

# கல்விகற்கும் மாணவர்களுக்கு இரவுவேளையில் மின்குமிழ் வசதி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் - வாதரவத்தையைச் சேர்ந்த கல்விகற்கும் மாணவர்களின் நன்மைகருதி, சூரிய சேமிப்புக்கலத்தின் உதவியுடன் இரவுவேளையில்-அக்காச்சி எழுச்சித்திட்டத்தில் மின் குழிழ்கள் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தமிழீழமாணவர் பேரவை ஏற்பாட்டில் மாணவர்களுக்கான கல்வி ஒழுங்குகள் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

புத்தூர் - வாதரவத்தை கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள், இரவு வேளைகளில் தமது கல்வியினைப் பயிலமுடியாதநிலையில், பல இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர். இதன் காரணத்தினால் மாணவர்களின் நன்மை கருதி சூரிய சேமிப்புக்கலத்தின் உதவியுடன் மின்னைப் பெற்று, இரவுவேளைகளில் மின்குமிழ் உதவியுடன் கல்வி கற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் 150 பாவனையாளருக்கு மின்சாரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகர்ப்புறத்தை அண்மித்த பிரதேசங்களிலுள்ள 150 நுகர்வோருக்கு மின்சாரம் வழங்கப் படவுள்ளதாகக் கரைதுறைப்பற்று பிரதேசசபை அறிவித்துள்ளது.

இதில் - வீட்டுப் பாவனையாளர்கள், வர்த்தகர்கள், ஆலைகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன அடங்குகின்றன.

மின்கம்பத்திலிருந்து 10 மீற்றர் தூரம் ஆயின், ஆறு ஆயிரம் ரூபாவும், 10 மீற்றருக்கு மேற்பட்ட இடத்திற்கு 8 ஆயிரம் ரூபாவும் வைப்புச் செய்யப்படவேண்டும் எனவும்,

வீட்டுப் பாவனையாளர்கள் ஒரு அலகிற்கான கட்டணமாக 10 ரூபாவினையும், வர்த்தகர்கள், ஆலைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒரு அலகிற்கான கட்டணம் 20 ரூபாவும் செலுத்தவேண்டும் எனவும் முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசசபையின் செயலர் தெரிவித்தார். (122)

# பற்றைகள் நிறைந்த இணுவில் தோட்டவீதி

(உடுவில்)

வலிதெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்கு மிக அண்மையில், அதன் அருகாக இணுவிலுக்கு செல்லும் தோட்டவீதியில் குறிப்பிட்ட சிறுபகுதி - பற்றைகள் நிறைந்து காணப்படுகிறது. இவ்விடத்தில் உடைந்த போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், சிகை அலங்கரிப்பு நிலையக் கழிவுகள், பழைய காலணிகள் போன்ற அசுத்தமான பொருட்கள் கொட்டப்பட்டு, அவை தெருவெங்கும் சிதறிக்கிடக்கின்றன.

இதனால் - அவ்வழியால் செல்வோரும், அருகில் தோட்டம் செய்வோரும் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (101)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஊழியர் தெரிவு குறித்து அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் தெரிவில், ஊழல் நிகழ்வதாகத் தெரிவித்து - யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கான வாகனச்சாரதி தெரிவிலேயே இந்த ஊழல் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தெரிவுக்கு விண்ணப்பம் அனுப்பியவர்களில் - அமைச்சர்களின் கையாட்களே தெரிவுக்கு அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறாக யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தில் இருப்போர் சகல தரத்திற்குமான உத்தியோகத்தர்களை அரசியல் செல்வாக்கு மற்றும் தனிப்பட்ட அறிமுகங்களை அடிப்படையாகக்கொண்டே - தெரிவு செய்துகொள்கின்றனர். இத்தகைய செயல்கள் இனிமேல் இடம்பெறக் கூடாது எனவும், அவ்வாறான செயலகள் கண்டிக்கத்தக்கதெனத் தெரிவித்துமே தமது அதிருப்தியை தெரிவித்தனர். (ப)


# வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

முல்லை. மாவட்டத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்குமாறு மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர்-அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக சுமார் 5400 ஹெக்ரெயர் நிலப்பரப்பு நெற்செய்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. மேலும் 700 ஹெக்ரெயர் வரையான நிலப்பரப்பு நெற்செய்கையும் பா்திக்கப்படலாம் என நம்பப்படுகின்றது. (122)

பஞ்சுச் சிதறல்
பல்சுவை அரங்கு

# அணு ஆயுதங்கள்



சர்வதேச அணுசக்தி அமைப்பு - உலகில் அணு ஆயுதங்கள் தொடர்பான உற்பத்தியை கண்காணிக்க அமைக்கப்பட்டிருப்பது போன்று, உயிரியல் இரசாயன ஆயுதங்களின் உற்பத்திக்கும் சரியான அமைப்பொன்று தேவையென, இங்கிலாந்தின் 'றோயல் கழகம்' தெரிவித்துள்ளது.


1975 ஆம் ஆண்டு உயிரியல் நஞ்சுப் பொருட்கள் போரில் பாவிக்கப்படுவதை தடுப்பதற்கென, ஒழுங்குசெய்யப்பட்ட மாநாடு முறையான விஞ்ஞான தகவல்களைப் பெறமுடியாத காரணத்தால் வெற்றியடையவில்லை.

இந்த மாநாட்டில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்த நாடுகளின் செயற்பாடுகள் - முதலில் பரீசலிக்கப்படவேண்டும் என பிரித்தானியாவின் தேசிய விஞ்ஞான கழகம் தெரிவித்திருக்கிறது.

உயிரியல், இரசாயன ஆயுதங்கள் - தொடர்புகளின்றி, விஞ்ஞான நோக்கத்திற்கான இந்த வகையான பரிசோதனைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் ஆராய்ச்சிகள் இராணுவத்தேவைகளுக்கும், தீவிரவாதிகளின் செயற்பாடுகளுக்கு எதிராகப் பாவிப்பதற்கும் உதவலாமெனத் தெரிவித்துள்ளனர்.

# செவ்வாய்க் கிரகமும் நீர்ப்படிவுகளும்

ஒப்போரினிற்றி (OPPORTUNITY) எனப்படும் அமெரிக்காவின் நாஸா விண்வெளி தளத்தில் இருந்து, செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட ரோவர் கலம் பூமிக்கு அனுப்பிய படங்கள், செவ்வாய்க் கிரகத்தில் நீர் இருப்பதற்கான சாத்தியங்களை எடுத்துக்காட்டியது.



செவ்வாயில் காணப்படும் இந்தப் பாறைகள் வண்டல் மண்ணினால் உருவாக்கப்பட்ட பாறைகள் (SEDEMENTARY ROCKS) எனக் கருதப்படுகிறது.

நீர், காற்று ஆகியவற்றில் காணப்படும் துகள்கள் ஒன்றிணைந்து, வண்டல் பாறைகளை உருவாக்குகின்றன. மேலும், இவ்வகையான பாறைகள் பல பாளங்களாக (SLAPS) காணப்படுவதும், விஞ்ஞானிகளின் கருத்துக்களை உறுதிசெய்வதற்கு துணைபுரிந்துள்ளன.

அதேநேரத்தில் இந்தப் பாறைகள் -எரிமலை வெடிக்கும்போது, உருகி ஓடிய லாவா (LAVA




FLOW) வினால் உருவாக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் கொள்ளமுடியாதென, நாஸா விஞ்ஞானி அன்ரியூ நொல் தெரிவித்தார்.

இவற்றை உறுதிசெய்வதற்கு ரோவர் கலத்தின்மூலம் மேலும் ஆய்வுகள் நடத்தப்படவேண் டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுவரை செவ்வாய்க் கிரகத்திலிருந்து கிடைத்த வர்ணப்படங்களில் - நிறங்களில் காணப்பட்ட மாறுபாடுகளும், பாறை அமைப்பும் நீர் இருக்கலாம் என ஊகித்துக்கொள்வதற்கு துணையாக அமைந்தன. ஆனால், இதுவும் சரியான உபகரணங்களின்மூலம் நேரடியாக பரிசோதிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# காலநிலை மாற்றம்





பூமியில் ஏற்படும் காலநிலை மாற்றங்களுக்கு, கிரகங்களிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சு (Cosmic Rays) காரணமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் முன்னர் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆனால், பூமியில் அதிகரித்துவரும் வெப்பத்திற்கு, மனிதர்களின் செயற்பாடுகளும் காரணமென தற்போது தெரிவித்துள்ளனர்.

மேலும் காபனீரொக்சைட் வளிமண்டலத்தில் அதிகரித்துவருவதும் வெப்ப அதிகரிப்புக்கு செறிவு முக்கிய காரணமென தெரிவித்தனர்.


சூரியஒளி - வான்வெளியில் காணப்படும் மற்றக் கிரகங்களிலிருந்து வெளிறிய கதிர்கள், முகில்களை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருப்பதாகவும், இதனால், பூமியின் மேற்பரப்பு குளிர்ச்சியாக காணப்படுவதற்கு துணையாக உள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

மேலும் பூமியின் மேற்பரப்பில் அதிகரித்துவரும் காபனீரொட்சைட்டின் செறிவு, பூமியிலிருந்து வெப்பம் வெளியேறுவதற்கும், இதனால் வெப்பம் குறைவதற்கும் சந்தர்ப்பங்கள் இல்லாது காணப்படுவதாகவும் அமெரிக்க புவியியல் சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

# வாரம் ஒரு யோகாசனம்

## நாடி சுத்திசெய்யும் விதம்

கை, கால், முகம், மூக்கு முதலியவற்றை சுத்தமாகக் கழுவித் துடைத்துக்கொள்ளவும். சுத்தமான காற்றோட்டம் உள்ள இடமாக இருக்கவேண்டும். ஒரு சுத்தமான விரிப்பின்மேல் அமரவும். ஒரு கைக்குட்டை இருப்பது நல்லது. சில சமயம் மூக்கைத் துடைத்துக்கொள்ளவேண்டியிருக்கும். பத்மாசனத்தில் இருக்கவும். பத்மாசனம் போட இயலாதவர்கள் - சித்தாசனம் அல்லது வஜ்சிராசனத்தில் இருக்கவும்.




முதுகு, கழுத்து, தலை இவை மூன்றும் நன்றாக நிமிர்ந்து நேராக இருக்கவேண்டும். கூனல், வளைவு இருக்கக்கூடாது. இடதுகை தொடையிலும் இருக்கவேண்டும். சாதாரணமாய் மூச்சைவிடவும். கண்களை மூடியிருக்கவேண்டும். வலதுகைப் பெருவிரலால் வலது நாசியை இலேசாக அமிழ்த்திமூடவும். இடது நாசியால் இயன்றவரை மூச்சை மெதுவாக இளுத்து நுரையீரல்களை நிரப்பவும். பின்பு வலதுகை மோதிர விரலால் இடது நாசியை லேசாய் அழுத்தி மூடவும். இப்போது வலது நாசியின் மேல் இருக்கும் பெருவிரலை அகற்றி விடவும். மூச்சை முன்னிழுத்ததை விட இரண்டு மடங்கு நேரம் நிதானமாய் விடவும். பின் வலது நாசியால் மூச்சை இழுக்கவும். பின் இடது நாசியில் இருக்கும் மோதிர விரலையகற்றவும். இடது நாசியால் விடவும். பெருவிரலால் வலது நாசியை அழுத்தவும். இது ஒரு சுற்று. இப்படி பத்து சுற்று செய்தால் போதுமானது. காலையில் பத்து சுற்றும், மாலையில் பத்து சுற்றும் செய்யவும். நாளடைவில் சுற்றுக்களின் எண்ணிக்கையை கூட்டிக்கொண்டு போகலாம். மூச்சு நிதானமாக இருக்க வேண்டும். நான்கு மூச்சிழுத்தால் 8 மூச்சு விடவேண்டும். மூச்சை எடுத்து உடனடியாக புஸ் என்று விடடால் எந்தப் பலனும் கிடையாது. இன்னும் கூடிய களைப்புத்தான் ஏற்படும். மற்றைய ஆசனங்கள் செய்ய இயலாதவர்கள் நாடி சுத்தியை மட்டும் செய்தால் போதுமானது. உணவு உட்கொண்டால், 30 நிமிடம் கழித்து செய்தல் நன்று.

### நன்மைகள்

உள்ளேயுள்ள பத்து வாயுக்களும் சுத்தமடைந்து, தத்தம் தொழிலை சரிவரச் செய்கின்றன. சுவாசப்பையை சுத்தமடையச் செய்கின்றன. இரத்தம் சுத்தமடைகின்றது. இரத்தக் குழாய்களில் கொழுப்புப் பிடிக்காது, புற்றுநோயும் வராது, வீரம் உண்டாகும், நோய்கள் அணுகாது. பீனிசம், ஆஸ்துமா, கசம், தடிமன் இவைகளைத் தடுக்கும் மருந்து இது. முகம் அழகு பெறும், சுக்கிலம் இறுகும், மலட்டுத் தன்மை விலகும், ஞாபக சக்தி உண்டாகும், கல்வி அறிவு வளரும். மன அடக்கம் உண்டாகும். காரம், கடுகு, உறைப்பு, தேநீர், கோப்பி என்பனவற்றை கொஞ்சம் கொஞ்சமாக விடவேண்டும். தாவர உணவு நன்மை தரும், புலால் உணவுக்கு நூற்றுக்கு ஐம பது வீதம்தான் பலன் கிடைக்கும். இல்லற வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது நாடிச்சுத்தியேயாகும்.

*தருபவர் - மா.மகாநேசன்.*





# யானையின் எலும்புக்கூடு

முற்காலத்தில் வாழ்ந்த மமொத் (MAMMOTH) எனப்படும் நீண்ட முடியைக் கொண்ட யானை இனத்தின் எலும்புக் கூட்டை, இங்கிலாந்தின் தென்பாகத்தில் விஞ்ஞானிகள் பூமியில் இருந்து அகழ்ந்தெடுத்துள்ளனர். இதன் வயது 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதென விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்த இனத்தின் வயதை அறிந்துகொள்வதற்கு ரேடியோ காபன் முறையை பிரயோகித்தனர்.

ரேடியோ காபன் (RADIO CARBON) எனப்படுவது, கரியின் மூலக்கூற்றின் கட்டமைப்பு - காலத்தால் சிதைவுறும்போது ஏற்படும் மாறுபட்ட கட்டமைப்பை உபயோகித்து, அதன் வயதை கணிப்பிடும் முறையாகும்

மேலும் இவ்வின யானைகளின் பரிணாம வளர்ச்சியும் (EVOLUTIONARY HISTORY) அவற்றின் காலப்பகுதியை அறிந்துகொள்வதற்கு துணைபுரிந்துள்ளது. இதனிடையே அகழ்வினை தொடர்ந்து மேற்கொண்டபோது, இந்த மிருகத்தின் எஞ்சிய எலும்புத் தொகுதியையும் பெறமுடிந்தது.

இந்த மிருகத்தின் பற்களை ஆராய்ந்தபோது, அதன் வயது 25 முதல் 40 இற்கு மேற்பட்டிருக்கலாம் என்பதையும் அறிந்து கொண்டனர்.

வயதின் மாற்றத்திற்கேற்ப, பல்லின் வளர்ச்சியில் காணப்பட்ட மாற்றம் - வயதை நிர்ணயிக்க உதவியதாக தெரிவித்துள்ளனர்.

## திரை விமர்சனம்

# புதுக்கோட்டையில் இருந்து சரவணன்



**தொ**டர்ச்சியாக வெற்றிமுகத்தில் இருக்கின்ற நாயகனின் படம் என்பதால், அனைவரினதும் கவனத்தினையும் தன்பக்கம் இழுத்திருக்கின்ற படம் இது. இயக்குநர் ஸ்டான்லி - தனுஷ் இருக்கின்றார் என்ற தைரியத்தில் அலட்சியமான திரைக்கதையை உருவாக்கியிருக்கின்றார்.

புதுக்கோட்டையிலிருந்து சிங்கப்பூருக்கு வேலை தேடிச்செல்லும் தனுஷ் - எதிர்பாராத ஒரு சண்டையில் சாகும் சீனாக்காரனால் கொலைப்பழிக்கு ஆளாகின்றார். கூடவே பாஸ்போட்டினையும் தொலைத்து விடுகின்றார்.

இந்தச் சமயத்தில் ஆபத்திலிருக்கும் அபர்ணாவைப் பத்திரமாக இந்தியாவில் சேர்க்கவேண்டிய பொறுபபும் வந்துவிட, அதையும் சமாளித்து வெற்றிபெறுகின்றார்.

நகைச்சுவை செய்வதாக தனுஷ் குரலை உயர்த்திப்பேசுவது எரிச்சலை உருவாக்குகிறது. புருஸ்லி ஸ்டைலில் சண்டை தேவைதானா. பல நாடுகளின் பொலிஸை இவ்வளவுதூரம் சிறுமைப்படுத்தவேண்டுமா? கருணாஸுடைய நகைச்சுவை பெரிதாக எடுபடவில்லை. சும்மா உப்புக்குப் பாடல்கள், மிளகுக்கு சண்டை என ஒரு இலக்கு இல்லாமல் படம் செல்கின்றது. தனுஷ், அபர்ணா தவிர வேறு ஒருவரும் இல்லாதது படத்துக்குப் பெரியகுறை. யுவனுடைய இசையில் பாடல்கள் எங்கேயோ கேட்டதுபோல இருந்தாலும் பரவாயில்லை. புஸ்வாணம் ஆகிவிட்டபடம். - **PNS**

# உணவை கட்டுப்படுத்துவோம்



உடல் பருமனைக் குறைபபதற்கு, உணவுக் கட்டுப்பாட்டை ஒருவர் விரும்புகின்ற பொழுதும், மூளை அதற்கு இடம் கொடுப்பதில்லை எனவும், உணவைக் கட்டுப்படுத்துவது உயிராபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு செயற்பாடென மூளை சிந்திக்க முற்படுவதாகவும், இதன் ஒரு செயற்பாடாக - மூளை சில ஓமோன்களை இரத்தத்தில் சுரந்து, குறைவான கலோரிகளில் வாழக் கற்றுக்கொடுக்கின்றது.

ஆதிமனிதன் - உணவு கிடைக்காத நிலையில், பட்டினியில் வாழக் கற்றுக்கொண்டிருந்தான். பரிணாம வளர்ச்சி இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.


உடல் பருத்தவர்கள் (**Obesity**) எண்ணிக்கை, உலகில் அதிகரித்து வருவதாக இங்கிலாந்தில் அமைந்துள்ள உணவுப்பொருட்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுவரும் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

எடின்பரோ பல்கலைக்கழகத்து விஞ்ஞானிகள் எவ்வாறு இந்த வகையான உடல் பருமன் ஏற்படுகின்றது என்பதனை ஆராய்ந்தனர்.

இதன்போது உடல் பருமனுக்கும், மூளையின் செயற்பாட்டிற்குமிடையே தொடர்பிருப்பதனை அறிந்துகொண்டனர்.

உடல் பருமன் கொண்டவர்கள் நீரிழிவுநோய், இதயநோய் ஆகியவற்றாலும் அதிகம் தாக்கப்படுவதையும் இந்த ஆய்வில் தெரியவந்தது.

# ஆசிய நாட்டுக் கழுகுகள்



**ஆ**சிய நாட்டைச் சேர்ந்த கழுகுகள் (**VULTURE**), வேகமாக அழிந்து வருவதை விஞ்ஞானிகள் அவதானித்து வந்துள்ளனர். மேலும் அவற்றின் அழிவிற்கான காரணத்தை அறிவதற்கு முயற்சிகள் மேற்கொண்டனர்.

இந்திய உபகண்டத்தில் 90% மான கழுகுகள் வேகமாக மறைந்து வருவதையும் அவதானித்தனர்.

லின்சே ஒசுக் (**LINSAY OAKS**) என்ற நிறுவனம் சேகரித்த புள்ளி விபரங்களில் - மிருக வைத்தியர்கள் பரவலாகப் பாவிக்கும் டிக்கோபெனிக் (**DICLOFENIC**) எனப்படும் மருந்தின் செறிவு, இறந்த மிருகங்களின் உடலில் காணப்பட்டதையும், அம்மிருகங்களை தமது உணவிற்காக பயனபடுத்திய மிருகங்களே அதிகளவில் மரணமடைந்ததையும் அறியமுடிந்தது.

நோ, எரிவு (**INFLAMMATION**) ஆகிய மருத்துவப் பிரச்சினைகளுக்காக வைத்தியர்கள் இம்மருந்தை மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் நீண்டகாலமாகவே சிபார்சு செய்துவந்தனர்.

இம்மருந்தின் செறிவு - உடற் பாகங்களில் காணப்பட்ட இறந்த உடல் பாகங்களைச் சாப்பிட்ட கழுகுகள் - தமது தலையை உயர்த்திக்கொள்ள முடியாதவாறு தாழ்த்திக் கொண்டிருப்பதையும் (**HANGING**) அவதானித்தார்கள்.

மேலும் இறந்த கழுகுகளைப் பரிசோதித்த ஆய்வாளர்கள் - டிக்கோபெனிக்கின் செறிவை (**CONCENTRATION**) உடல் பாகங்களில் கண்டு பிடித்தனர்.

மேலும் இம்மருந்தினை மிருகங்களுக்குப் பாவித்து, அவற்றின்மூலம் இறந்த் அம்மிருகங்களை கழுகுக்கு உணவாகக் கொடுத்து, தமது பரிசோதனையில் உண்மை இருப்பதையும் நிரூபித்துக்கொண்டனர்.

இதன் பின் பறவைகள் தொடர்பான அறிஞர்கள் (**ORNITHOLOGIST**) இம் மருந்தினை தடைசெய்யவேண்டும் என்ற பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆசிய நாடுகளின் இயற்கைச் சூழலின் சமநிலைக்கு, இப்பறவைகள் முக்கிய பங்கினை ஆற்றிவருகின்றன.

இறந்த மிருகங்களின் உடல்களை அகற்றுவதில் இப்பறவை இனம் ஒரு துப்புரவுத் தொழிலாளிபோல் செயற்படுகின்றன.

நேபாளத்தில் இறந்த மனித உடல்களை கழுகுகளுக்கு உணவாகக் கொடுக்கும் சமய நம்பிக்கையும் பேணப்பட்டு வருவது குறிப்பிடக்கூடியதாகும். ஒரு இனத்தின் அழிவு - இன்னொரு இனத்தின் பெருக்கத்திற்கு வழிவகுப்பது இயற்கையின் நியதியாகும்.

இந்தக் கழுகினங்கள் உணவிற்காகப் பயன்படுத்தும் ஒரு வகை தவளையினம் அதிக அளவில் பெருகி வருவதும் மேலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

# குரங்குகளில் சோதனை



**கே**ம்பிரிஜ் பல்கலைக்கழகம் - குரங்குகளை வைத்திய ஆய்விற்குப் பயன்படுத்துவதற்காக, பரிசோதனைக் கூடமொன்றை உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தது.

இந்தக் கூடத்தின்மூலம், பல மருத்துவரீதியான சாதனைகளை நிலைநாட்டமுடியும் எனக் கருதப்படுகின்றது.

இவற்றுள் பெரும்பாலும் தற்போது மருத்துவ சிகச்சைகளில் பல சிக்கல்களை உருவாக்கியிருக்கின்ற மூளை பற்றிய பலத்த சர்ச்சைகளுக்கு இது தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்குக் கிட்டத்தட்ட 24 மில்லியன் தொடக்கம் - 32 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், இப்படியான ஆராய்ச்சிகளைச் செய்வதற்குப் பெருமளவு தடைகள் வரலாம் எனவும் கருதப்படுகின்றது.

ஆனால், தேசியரீதியில் இதற்கு ஆதரவு கிடைக்கும்பொழுது, இதற்கு முற்றுமுழுதான ஆதரவு கிடைக்கப்பெறும் என பிரிட்டிஷ் அரசாங்கம் கருதுகிறது. சிலவேளைகளில் இந்த ஆராய்ச்சி ஒரு கேலிக்கூத்தாகவும் அமையலாம் என்பது ஒருசாராரின் வாதம். ஆனால், இந்த ஆராய்ச் சிகளின் வெற்றி - மருத்துவ உலகில் கிடைக்க இருக்கின்ற ஜக்பொட் பரிசுதான்.

# ஹபிள் தொலைநோக்கி




**வா**ன்வெளியில் நீண்டகாலமாக சுற்றிவந்த ஹபிள் விண்வெளி தொலை நோக்கியை (**HABBIL SPACE TELESCOPE**) இயங்கவைப்பதற்கோ, திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கோ முயற்சிக்கப்போவதில்லை என, ஜனவரி மாதம் 16 ஆம் திகதி நாஸா விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர் சீன் ஓ கீபி தெரிவித்தார்.

இந்தத் தொலைநோக்கியின் சில முக்கிய உபகரணங்கள் தொடர்ந்து செயலிழந்துவருவதனால், தொலை நோக்கி கருவியை நிரந்தரமாக நிறுத்தி விடுவதற்கு நாஸா தீர்மானித்திருந்தது. கொலம்பிய விண்வெளிக்கலம் ஒன்று வானவெளியில் வெடித்துச் சிதறியபின், விண்வெளி வீரர்களை விண்வெளி யிலுள்ள சர்வதேச விண்வெளி நிலையங்களுக்கு அனுப்புவது பாதுகாப்பற்றது என்ற கருத்தையும் வெளிப்படுத்தியிருந் தார்.

இதனால், கணினியில் தளம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் மூலம் தமது எதிர்ப்பினை பலர் தெரிவித்துள்ளனர்.



இந்தத் தளத்தின்மூலம் கருத்துத் தெரிவித்த பிரேசிலைச் சேர்ந்த பெர்னாண்டோ ரிபேரியோ மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார் -

முதன்முதலில் சந்திரனில் இறங்கிய ஆம்ஸ்ரோங் - தனது முதல் காலடியை சந்திரனின் தரையில் பதித்தபோது, தனக்கு ஏற்பட்டிருந்த மன உணர்வுகளையும், ஹபிள் தொலைநோக்கியின் செயற்பாடுகளையும் நிறுத்திவிடுவதாக தெரிவித்தபோது ஏற்பட்ட மன உணர்வுகளைக் குறிப்பிட்டிருந்தார்.

நாஸாவிற்கும், அமெரிக்க அரசியல்வாதிகளுக்கும் ஹபிள் தொலை நோக்கியில் திருத்த வேலைகள் மேற்கொண்டு பணிகள் தொடரவேண்டும் என முறைப் பாடு தெரிவிக்கப்போவதாக பலர் தெரிவித்துள்ளனர்.

செய்திக் கட்டுரை

காவலூர் விஜேந்திரன்


# வலை உற்பத்தியில் தனித்துவம்பேணும்

இராணுவ நடவடிக்கைகளின் எச்சங்களைத் தாங்கிய இந்த நிறுவனக் கட்டடங்கள் இப்பொழுதும் உள்ளமை மனவேதனைக்குரிய விடயமாகும். அனுமதியின்றி உட்செல்லாதீர் என்ற விளம்பரப் பலகையுடன், இராணுவப் பாதுகாப்பு வலயத்திற்குள் இந்தநிறுவனம் அமைந்திருக்கிறது. அண்மைக் காலங்களில்தான் ஓரளவு இலகுவாகப் போய்வரக்கூடியதாகவுள்ள வடகடல் நிறுவனம், பழைய பொலிவுகளை இழந்து ஆர்ப்பாட்டமின்றி இயங்கிக்கொண்டிருக்கிறது.

இலங்கையின் பல பாகங்களிற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து வலை உற்பத்திசெய்து, ஏற்றுமதி செய்யப்பட்டது. வலை உற்பத்தி விற்பனையில் தனக்கென ஒரு இடத்தை தககவைத்து வெளிநாட்டு இறக்குமதிகளுககு ஈடாக, தரமான வலைகளை பல அளவுகளில் விற்பனைசெய்து வந்தது. இதன்மூலம் பெற்ற வரவேற்பால் நீர்கொழும்பு, மாத்தளை, மட்டக்குளி,கொழும்பு போன்ற இடங்களில் வலை உற்பத்தியுடன் படகு கட்டுதல் படகு திருத்துதல், பணிகளும் ஆரம்பமாகின. இவற்றோடு மட்டக்களப்பு களுவாங்கேணியில் ஐஸ் உற்பத்தி நிலையமும் நிறுவப்பட்டது. இவை இன்று இரண்டு தசாப்தங்களிற்கு முன் இடம்பெற்றவை.

குருநகரைச் சேர்ந்த அன்ரனி ராஜேந்திரம் என்பவரால், நோர்வே நல்லொழுக்க வாலிபர் சங்கத்தின் ஒத்துழைப்புடன்- 1967 ஆம் ஆண்டு தோப்புக்காட்டுக் கிராமத்தில் சீனோர் அபிவிருத்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. கிராமிய மக்களின் கல்வி, சுகாதார, பொருளாதார வசதிகளை மேம்படுத்துவதுடன், மீன்பிடி இயல் பயிற்சி நெறிகளையும், மீன்பிடி உபகரணங்களை வடிவமைப்பதுடன், கடலுணவுகளைப் பதனிட்டு ஏற்றுமதி செய்யும் நோக்கில், கரையோரப் பிரதேச தெரிவில் காரைநகர் - தோப்புக்காடு கிராமம் தெரிவாகியது.

இயற்கையாக அமைந்த ஊர்காவற்துறைமுகம், கடல் போக்குவரத்திற்குச் சாதகமாக அமைந்தமையாலும் யாழ்ப்பாணத்துடனும், ஏனைய இடங்களுடனும் இலகுவாக கடற்போக்குவரத்தின் ஊடாக தொடர்புகளை மேற்கொள்வதற்கும் என தோப்புக காடு கிராமம், இந் நிறுவனம் அமைவதற்கு தெரிவு செய்யப்பட்டது.





வைகுந்த வாசன் என்ற நபரின் பெயரில் 'மாலுமீன்' எண்டபிறைசஸ் என பதிவு செய்யப்பட்டு, சிறிது காலம் இயங்கினாலும், அதன் பின்னா சீனோர் அபிவிருத்தி நிறுவனமாக பெயர் மாற்றப்பட்டது. நோர்வேயின் உதவியுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டமையினால், இருநாடுகளின் பெயர்களையும் (சிலோன் - நோர்வே) மையமாக வைத்தே சீனோர் என்ற பெயர் வைத்ததாகவும் அறியமுடிகிறது. தோப்புக்காடு சீனோர் நிறுவனத்தால் - படகுகட்டுதல், படகுதிருத்துதல், கடல் உணவுகள் பதனிடல், வலை உற்பத்தி, ஐஸ் உற்பத்தி இவற்றுடன் மீன்பிடி பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இவ்வாறான கடல் தொழில்சார் செயறபாடுகள் இடம்பெற்றுவந்தன.

இங்கு முதல் முறையாக 171/2 அடி நீளமான கல்தார் இளைப்படகு வடிவமைக்கப்பட்டது. இதன் பின்னர், 38 அடி நீளமான படகும் வடிவமைத்து விற்பனை செய்யப்பட்டது. இந்த நிறுவனத்தின் கிளையாக 1976 ஆம் ஆண்டு குருநகர் பகுதியில் சீனோர் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. தோப்புக்காட்டு நிறுவனத்தில் அனைத்துச் செயற்பாடுகளும் நடைபெற்றபோதிலும், வலை உற்பத்தி பிரதானமாக மேற்கொள்ளப்பட்டது.

குடாநாட்டு மீனவர்களின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக அவர்களிற்குத தேவையான உபகரணங்களை வழங்கும் அதேவேளை, அவர்களிடம் கடல் உணவுகளை கொள்வனவு செய்து பதனிட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. தனியே கரையோரக்

## சீனோர் நிறுவனம்-ஓர்நோக்கு

கிராம மக்களின் முன்னேற்றத்திற்கும், அவர்களது வளர்ச்சிக்காகவும் உருவாக்கப்பட்ட போதிலும், பெருமளவான தொழிலாளர்கள் ஏனைய இடங்களிலிருந்து வேலைவாய்ப்பைப் பெறக்கூடியதாக இருந்தது. 1982 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 600 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்துள்ளனர். இதனால், கரையோர மக்கள் மாத்திரமன்றி நகர, கிராம மக்கள் பல வழிகளிலும் பயனடைய முடிந்தமை, இந்த நிறுவனத்தை அமைத்தவர்களின் முயற்சிக்கு மேலும் மெருகூட்டுபவையாக அமைந்தன. ஒரு தசாப்தகாலமாக சிறப்பாகச் செயற்பட்டுவந்த சீனோர் நிறுவனம் - மீனவசமூகத்திற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைநதது என்றால் அது மிகையாகாது.

வலையுற்பத்தியில் தனக்கென தனியிடத்தை தக்கவைதது நாட்டின் பல பாகங்களிற்கும் ஏற்றுமதி செய்தபெருமை - இநதக் காலப்பகுதியில் கடமையாற்றிய ஊழியரகளது கடின உழைப்பின் விளைவுடன், அவர்களது கூட்டுமுயற்சியும், அனுபவ வெளிப்பாடுமே காரணங்களாக அமைந்தன. 1976 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சீனோர் நிறுவனம் - 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம்வரை சிறப்பாக இயங்கியது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால், மின்சாரம் தடைப்பட்டது. இதனால், தனது செயற்பாடுகளை இடைநிறுத்தியது. கடந்த ஒரு தசாப்த காலமாக செயலிழந்திருந்த சீனோர் நிறுவனத்தை, நாட்டில் ஏற்பட்ட ஓரளவு சாதகமான காலத்தை காரணம்காட்டி, மீண்டும் செயற்பட நவைக்க ஆரம்பகால தொழிலாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டு, உரிய அமைப்புகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்தனர்.

2001-06-28 திகதியன்று, வடகடல் நிறுவனமாக புனர் வாழ்வு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டு செயற்படத் தொடங்கியது. வடகடல் நிறுவனம் (**NORTH SEA LIMITD**) முழுமையான வசதிகளின்றி, ஆரோக்கியமான தொழிலாளர்களின்றி (தொழிலாளர்களின் தகுதி, அனுபவம், திறமை, சேவைககாலம் இவற்றைக் கருத்தில் கொள்ளாது) செயற்பட்டது. இந்த நிறுவனத்தின் பிரதான செயற்பாடாக, வலையுற்பத்தியை மேற்கொண்டு வந்தனர். அரசியல் மாற்றங்கள் காரணமாக இந்த நிறுவனம் 2002 ஆம் ஆண்டில் அன்றைய அமைச்சின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டது.

இதன் பின்னர் ஊழியர் வளத்தில் மாற்றம் ஏற்படாமல், உற்பத்திச் செயற்பாடுகள் இடம்பெற்றுவந்தன. 2003 ஆம் ஆண்டு ஜூனில் இருந்து இந்த நிறுவனம், இந்து கலாசார அமைச்சின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டு, செயற்பட்டுவருகிறது. கடற்தொழில் அமைச்சின்கீழ் பதிவு செய்யப்பட்டு, செயற்பட்டு வந்த இந்த நிறுவனம் - முழுமையாக ஒரு அமைசசின்கீழ் வராது செயற்பட்டு வருகின்றமை, இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கலாம் என்ற கருத்து ஊழியர் மத்தியில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தில் யாழ்.குடாப் பரப்பில் பயன்படுத்தக்கூடிய வலைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இவை யாழ்.மாவட்டத்தில் மடடுமே விற்பனை செய்யப்படுகின்றன. மிக விரைவில் மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு வலை விற்பனை விஸ்தரிக்கப்படவுள்ளது.

ஆழம் குறைந்த கடற்பரப்பில் மட்டும் பயன்படுத்தக்கூடிய வலைகள் உற்பத்தி செய்யப்படுபவை, இந்த நிறுவனத்தின் இன்றைய நிலைக்குத் தெளிவான எடுத்துக்காட்டாகவுள்ளது. இப்பொழுது வலையுற்பத்தி வருடத்தில் 6000 கிலோவே இடம்பெறுகிறது. ஒரு மாதத்தில் 1200 கிலோ உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்கள் இருந்தபோதிலும், மூலப்பொருட்கள் இன்மையால் உற்பததியின் தொகை அரைவாசிக்கு மேல் குறைவடைந்துள்ளது. கொழும்பு மற்றும் ஏனைய இடங்களிலிருந்து வலைகள் வந்தாலும், வடகடல் நிறுவனத்தின் வலைகளுக்கு மீனவர்கள் மத்தியில் மகத்தான வரவேற்பு உள்ளமை அங்கு இடம்பெறும் நடவடிக்கையின் மூலம் அறியமுடிகிறது.

வடகடல் நிறுவனத்தில் தேநீர்ச்சாலை, அவர்களுக்கான சீருடையென ஊழியர், தொழிலாளர் களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இரண்டு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது. நூல் கையிருப்பில் தொடர்ந்திருக்காமையால், இடையிடையே உற்பத்திச் செயற்பாடுகள் தடைப்படுகின்றன. இவற்றுக்குக் காரணம் நிதி வளமின்மையென்றே தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட அனுபவம், ஆளுமையுள்ள தொழிலாளர்கள் கடமையாற்றுகின்றனர். இதனை உரிய முறையில் பயன்படுத்தி தனியே வலையுற்பத்தியை மட்டுமல்லாது, ஐஸ் உற்பத்தியென இந்த நிறுவனத்தின் முன்னைய செயற்பாடுகளை மேற்கொள்ள உரியவர்கள் உரிய இடங்களில் அழுத்தங்களைப் பிரயோகித்து நிறுவனத்தை வளர்க்கவேண்டும். அன்றைய (25 வருடங்களுக்கு முன்) சீனோர் நிறுவனத்தைப் போல், வடகடல் நிறுவனமும் முழுமையான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். நலிந்துபோயுள்ள நிறுவனத்தையும், நிறுவனஞ் சார் சமூகத்தையும் முன்னேகொண்டுவரவேண்டும். உரியவர்கள் இந்த நிறுவனத்தின் முழுமையான செயற்பாடுகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பார்களா?.

மக்கள் பிரச்சினை...

செந்தணன்

# ஏழைகளின் கல்விக்குத் தடைபோடும் 'டொனேசன்' அறவீடு நீங்குமா........?

மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்க்கும்போது, பாடசாலை அபிவிருத்திக்கெனக் கூறிக்கொண்டு - யாழ்.மாவட்டத்தில் இயங்கும் பல பாடசாலைகள் பெற்றோரிடம் அதிகளவிலான 'டொனேசன்' கேட்பதால், வறுமைக் கோட்டின்கீழ் வாடும் குடும்பங்கள் கல்வியை எட்டாக் கனியாகப் பார்க்கும்நிலை உருவாகி வருகின்றது.

சிறுவர்களின் நலன்கள் பற்றியும், கல்விச் சேவைபற்றியும் பேசும் அமைப்புக்களும், கல்விமான்களும் மிகவும் கரிசனையோடு கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்களில் ஒன்றாக இந்த விடயம் இன்று பூதாகாரமடைந்துள்ளது.

1930 களில் இலங்கையில் இலவசக்கல்வி முறையை கன்னங்கரா அறிமுகப்படுத்தினார். ஏழைகளுக்குக் கிடைத்த அரிய செல்வமாக இலவசக்கல்வி முறை போற்றப்பட்டது.

இதனால், பணம் படைத்த உயர்வகுப்பினர்க்கு மட்டும், கல்வி உரியது என்ற நிலை மாற்றி அமைக்கப்பட்டதுடன் - கல்வியையும், அறியும் அனைவருமே பெறமுடியும். அதனூடக உயரமுடியும் என்ற புதிய அத்தியாயம் உருவாக்கப்பட்டது.

சமூகத்தில் கல்வி அறிவுடையவனே உயர்வாக மதிக்கப்படுவான் என்ற வள்ளுவர் கூற்றுககிணங்க, போட்டிபோட்டுக் கொண்டு எல்லோரும் கல்விப்பாதையூடாக முன்னேற்றத்தை நாடினர்.

சமூகமட்டத்திலிருந்த பல்வேறு கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளையும், வரையறைகளையும்தாண்டி, அனைவரையும் ஒன்றுபடுத்திய பெருமை கல்வியையேசாரும்.

அத்தகைய சிறந்த சமூகநகர்வை வேண்டித்தான், இலவசக் கல்வி முறையும், கல்வித் தரத்தினடிப்படையிலான வேலைவாய்ப்பு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும், பாடசாலைகளில் ஏற்படக்கூடிய பல்வேறு செலவுகளையும், அரசாங்கம் பொறுப்பெடுத்துச் செய்யும் நிலையில் மேலதிகமாக ஆசிரியர்களைச் சேவைக்கு வைத்திருத்தல் (தொண்டர் நியமனம்) உடனடித்தளபாடத் தேவைகள், மாணவர் நலன் காக்கும் செயற்பாடுகள் என்பவற்றிற்காக பாடசாலைகளில் 'டொனேசன்' பெறும்முறை அறிமுகமானது.

அரசாங்கப் பாடசாலைகளில் மாணவரின் குடும்பநிலைக்கேற்ப, மிகவும் சொற்பபணமே அறவிடப்பட்டு வந்தது. தனியார் பாடசாலைகள் ஆரம்பத்திலிருந்து தனித்துவமான வகையில் வசதிபடைத்தவர்களின் பாடசாலைகளாகச் செயற்பட்டு, மாணவனின் கல்வி நலனுக்கப்பால், பாடசாலையின் விருத்தி என்பதை அடிப்படையாகக்கொண்டு அதிக பணத்தை அறவிட்டு மாணவர்களைப் பாடசாலையில் சேர்ப்பதற்கான 'டொனேசன்' முதல் ஒவ்வொரு தவணையும் அதிகளவிலான பணம் அறவிடப்பட்டுவந்தன.

இன்றுள்ள நிலைமையோ, அரசாங்கப் பாடசாலைகள் - தனியார் பாடசாலைகளை விட அதிகளவில் 'டொனேசன்' முதல்கொண்டு, தவணைப்பணம் வரையிலான சகலதுமே அறவிடப்படுகின்றன.

1995 ஆம் ஆண்டின்பின் சமூகத்தில் இத்தகைய இழிசெயல்கள் மலிந்துள்ளனவோ, அதேபோல் - பாடசாலைகளிலும் துஷ்பிரயோகங்கள், கலாசாரச் சீரழிவுகள், கையாடல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் முதலியன இலகுவாக விரவிக்காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றாகவே இந்த 'டொனேசன்' அறவீடும் அதிகரித்திருக்கின்றது.

இவற்றில் இன்றும்கூட 'டொனேசன்' அறவிடாது மாணவர் அனுமதிக்காக நூறு ரூபாக்கும் குறைவான தொகையைப் பெறும் வகையில், மற்றவரின் கஷ்டங்களை உணர்ந்து கொண்டு செயற்படும் பாடசாலைகளை இணைத்துக் கொள்ளமுடியாது.

எனினும், அப்பாடசாலைகள் கல்வித்தரத்திலிருந்து, கட்டடத்தரம் மட்டும் பின்தங்கிய நிலையிலேயே இருந்துவரும் நிலையும் உள்ளது. ஏனெனில், அமைச்சர்களின் உதவியோடு குளிரூட்டப்பட்ட அறையில் பணிபுரியத் தக்க வசதிகொண்ட பாடசாலைகளுக்கே தொடர்ந்தும் உதவிகள் கிடைக்கின்றன.

புதிய கட்டடங்கள் அழகாகத் திறந்து வைக்கப்படுகின்றன. இவ்வாறிருந்தால், எப்படி பின்தங்கிய பாட சாலைகள் முன்னேறமுடியும். காலப் போக்கில் எஞ்சியிருக்கும் சில பாடசாலைகளும் பெருந்தொகை 'டொனேசன்' கேட்கத் தொடங்கினால் ஏழைகளின் கல்வி நிலை என்னவாகும்?

யாழ்.நகரை அண்டியபகுதியிலுள்ள ஆரம்பக் கல்வி மட்டும் கற்பிக்கப்படும் சில பாடசாலைகளில் 'டொனேசன்' என்ற பெயரில் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாவரை அறவிடப்படுகிறதாம்.

ஆரம்ப அறிவு என்பது மிகவும் அவசியமானது எனக் கருதுவதால், பணத்தைப் பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல், அப்பாடசாலைகளில் தமது பிள்ளைகளை இணைத்து கற்பிக்கின்றனர்.

வசதியற்ற பெற்றோரால் தமது பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டுமென்ற எத்தனை ஆசைகள் வைத்திருந்தாலும், அத்தகைய பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்க முடியாது போகும்போது, பெரும் ஏமாற்றத்தையும், மனவேதனையையும் அடைகின்றனர்.

இந்தநிலையில், ஏனைய பாடசாலைகளிலும் இவ்வாறு 'டொனேசன்' என்ற பெயரில் அதிகளவிலான பணம் அறவிடப்பட ஆரம்பித்திருப்பதும் மக்கள் மத்தியில் பெரும் அதிருபதியை ஏற்படுத்தியுள்ளது.

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை*
*வியந்தான் விரைந்து கெடும்.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### சமாதானம் மரணிக்கிறதாம்; கதிர்காமர் ஓலமிடுகிறார்!

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதி முறையில், பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும் நோக்குடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு கடந்த இரண்டாண்டு காலமாக மேற்கொண்டுவந்த முயற்சிகள் மரணமடையும் தறுவாயில் உள்ளதாக, முன்னாள் வெளியுறவு அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் புதுடெல்கியில் வைத்து தெரிவித்தார்.

எப்போது, இப்போதைய சமாதான சூழல் மரணிக்கும் என கடந்த இரண்டாண்டு காலமாக மிகமிக ஆவலுடன் நாட்களை எண்ணிக் காத்திருக்கும் ஒருவரின் குரலாகவே இது ஒலிப்பதாக உள்ளது.

'மரணமடையும் தறுவாய்' என எதைவைத்துக் கதிர்காமர் கூறுகிறார்? பேச்சுவார்த்தைகளை தொடங்கிய ஐ.தே. முன்னணி அரசும், விடுதலைப் புலிகளும் அதிலிருந்து விலகிவிட்டதாகவோ, விலகப்போவதாகவோ. இதுவரை அறிவிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தாம் இன்னமும் சமாதானம் தொடர்பான விடயங்களில் மிகப் பற்றுறுதியுடன் இருப்பதாக வெளிப்படையாகவே கூறிவருவதுடன், அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் தீவிர ஆர்வமும் காட்டி வருகின்றனர். சமாதானப் பேச்சுக்களை அடுத்தகட்டம் நோக்கி நகர்வதற்கு மிக அவசியமானதாக உள்ள இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த சட்ட வரைபினை அரசிடம் சமர்ப்பித்துள்ளதுடன், அது குறித்த அபிப்பிராயங்களையும், முடிவையும் அரசிடமிருந்து எதிர்பார்த்துமுள்ள நிலையில் சமாதானம் குறித்த அடுத்த நடவடிக்கையை தீர்மானிக்கும் பொறுப்பு அரசிடமே உள்ளது என்பதை சர்வதேச சமூகமும் அறியும்.

அதுபோல், ரணில் அரசு சமாதானம் தொடர்பான முன்னெடுப்புக்களைத் தொடர்வதற்கு வேண்டிய மிக முக்கியமான அதிகாரங்களைக் கொண்ட அமைச்சுக்களை அவர் நாட்டில் இல்லாத வேளையில் தன்வசம் அபகரித்து எடுத்துக்கொண்டதன்மூலம் அமைதி முயற்சிகளைத் தேக்கநிலைக்குத் தள்ளி பலவீனப்படுத்திய கைங்கரியத்தைச் செய்தவர் ஜனாதிபதியே யாவார். அவருக்கு அதற்கான ஆலோசனைகளை வழங்கியவர்களுள் நிச்சயமாக இந்தக் கதிர்காமரும் ஒருவராகவே இருப்பார்.

எனவே, சமாதான முயற்சிகள் மரணிக்கவேண்டுமென கடுமையாக உழைத்தவர்களில் ஒருவராக கதிர்காமரும் இனம் காணப்பட்டேயுள்ளார். அது ஒரு புறமிருக்க, சர்வதேச சமூகம் சமாதானத்தை தொடர வலியுறுத்தி, அதற்கு ஆதரவு நல்கும் நிலையில் அதனை தொடரும் பொறுப்பினை அதிகாரபலமுள்ள, தீர்மானமெடுக்கும் சக்திமிக்க ஜனாதிபதியே ஏற்கவேண்டும் என, ரணில் கோரியிருக்கையில் அதனை நிராகரித்து மறுத்த ஜனாதிபதியின் செயல் - தேசியநலனுக்கு அவசியமான சமாதான முன்னெடுப்பை அவர் விரும்பவிலலை என்பதையே நிரூபிக்கிறது. எனவே, சமாதானம் மரணிப்பதைப் பார்க்க விரும்பும் ஒருவராகவே சந்திரிகாவும் இனங்காணப்பட்டுள்ளார்.

உண்மையில் கதிர்காமர் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றினை ஜனாதிபதி காணும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என விரும்பியிருப்பாரேயானால், நிறைவேற்று அதிகார வலுமிக்க ஜனாதிபதியை சமாதான முன்னெடுப்புக்களை பொறுப்பேற்கவேண்டுமென வலியுறுத்தி ஆலோசனை கூறியிருக்கவேண்டும்.

ஆனால், அவர் ஓடோடிப்போய் இந்தியாவில் நின்றுகொண்டு சமாதானம் மரணிக்கப்போகிறது, இந்தியா இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்வதற்கான தருணம் வந்துவிட்டது என டெல்கி அரசுக்கு ஆலோசனை தெரிவித்து ஒப்பாரி வைத்துள்ளமைதான் விநோதமானது.


மக்களின் ஆணை பெற்ற, அதிகார பலமுள்ள, தீர்மானம் எடுக்கும் திறனுள்ள எவருடனும் பேசத் தயாரென விடுதலைப் புலிகள் பகிரங்கமாகவே அறிவித்துள்ள நிலையில், அத்தகைய தகுதியுடையவர் தான்தான் என ஜனாதிபதி நம்புவாரேயானால், அதற்கு முன்வரவேண்டியதுதானே... அதற்கேன் இந்தியாவை தலையிடுமாறு கோர கதிர்காமரை டெல்கிக்கு காவடி எடுக்கவைக்கவேண்டும்.

இதுதான் சந்தேகத்திற்குரிய விடயமாகும். இன்றைய சமாதான முயற்சிகளில் இந்தியாவின் விசுவாசமான ஆதரவு கேள்விக்குறியான நிலையில் உள்ளதை அரசியல் அறிந்தோர் அறிவர். பெரும்பாலான மேற்குல நாடுகள், ஐரோப்பிய நாடுகள், நோர்வே, அவுஸ்ரேலியா என அனைத்து நாடுகளும் சமாதான முயற்சிக்கு உதவ வெளிப்படையாகவே விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், இலங்கையில் உள்நாட்டு பிரச்சினையில் நேரடியாகத் தலையிடமாட்டோம் என்று கூறிக்கொண்டு, ஓடும் புளியம்பழமும் போல் இருப்பதாகக் காட்டிக்கொண்டு வேறுவகையிலான அரசியல் உள்நோக்கத்துடன் செயற்படும் இந்தியாவை கதிர்காமர் வருந்தியழைப்பது எதற்காக?

இதன் மூலம் கதிர்காமர் இந்தியாவின் நலனைப் பாதுகாக்க விரும்புகிறாரா? இலங்கையினதும், தமிழ்மக்களினதும் நலனைப் பாதுகாக்க விரும்புகிறாரா? கதிர்காமரின் கடந்த காலச்செயற்பாடுகள் அனைத்தையும் நன்கு அவதானித்தால் இலங்கையோ, தமிழ்மக்களோ எப்படியானாலும், தான் சந்திரிகாவுக்கும், இந்தியாவுக்கும் விசுவாசமான கொத்தடிமையாக இருப்பதை வெளிப்படுத்திக்கொண்டால் போதும் என்று நினைக்கும் ஒரு பிரகிருதிதான் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

'சமாதானம் சாகப்போகிறது'. என அவர் எழுப்பும் ஓலம் அவரின் ஆத்மா அமைதியை விரும்பாத நிலையில் உள்ளமையையே எதிரொலிப்பதாக உள்ளது.

## நாடும் நடப்பும்




செய்தி :- பிரதமர் - ஜனாதிபதி இருவரும் சேர்ந்தால் இடையூறுகளை அகற்றமுடியும்
- சர்வதேச சமூகம்

# ஏ-9 வீதியை 24 மணிநேரமும் திறந்துவைக்குமாறு கோரிக்கை

ஏ-9 பாதையை பொதுமக்களின் பாவனைக்கு 24 மணிநேரமும் திறந்துவிட உடன் நடவடிக்கை எடுக்கும்படி மனித உரிமைகளை மேம்படுத்தலும், பாதுகாத்தலுக்குமான யாழ். மாவட்ட சமூக பாதுகாப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் - படைத்தரப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பான தீர்மானமொன்று, கடந்த வெள்ளியன்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெற்ற இந்தக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

வடமராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.சிறீபதி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள மனிதநேய அமைப்புகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

இது தொடர்பாக, இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏ- 9 பாதை 24 மணி நேரமும் திறக்க அனுமதிக்காமையினால், பொதுமக்களின் போக்குவரத்துக்கான அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுவருகின்றன. அத்துடன், குடாநாட்டு மக்கள் தமது அவசர, அவசிய தேவைகள் நிமித்தம் குடாநாட்டுக்கு வெளியே செல்லவேண்டிய தேவைகள் இருக்கின்றபோதிலும்கூட - அவற்றினை நிறைவேற்றமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்தப் பாதையை 24 மணி நேரமும் திறந்து பொதுமக்களுக்கு வசதியை ஏற்படுத்தும்படி பல தடவைகள் பல அமைப்புக்களால் கோரிக்கைகள் விடப்பட்ட போதிலும் அவற்றை சம்பந்தப்பட்டோர் கவனத்திற் கொள்ளாமல் இருப்பது வேதனைக்குரியதாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

## ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்க போட்டிகளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 14 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சங்க அங்கத்தவர்களிடையே பல்வேறு போட்டிகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த நிகழ்வுகளின் இறுதி நாளான நாளை - பரிசளிப்பு நிகழ்வும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

கடந்த 26 ஆம் திகதி தொடங்கிய போட்டிகளில் தையல், மாலைகட்டல், கடிதஉறை ஒட்டுதல், கோலம்போடுதல், சிகை அலங்கரிப்பு, ஓவியம் வரைதல், கதிரை பின்னுதல், சங்கீதம், திருக்குறள் மனனம் ஆகிய உள்ளகப் போட்டிகளல் சங்க அங்கத்தவர்கள் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

இறுதி நாள் சிறப்புப் போட்டியாக நாளை காலை 7.30 மணிக்கு முச்சக்கர வண்டி, சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. காலை 9 மணிக்குக் கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இந்தப் போட்டிகளில் சங்க எல்லைக்குட்பட்ட அங்கத்தவர்கள் பெருமளவில் பங்குகொள்வதுடன், பரிசில்களையும் பெற்றுச் செல்வதாகவும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க நிர்வாக அலுவலர் தெரிவித்தார். (91)

## வடமராட்சி மீனவர்களுக்கு நிகொட் 3 கோடி ரூபா உதவி

வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி வடக்குப் பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர் சங்கங்களுக்கு நிகொட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 3 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது. இதுகுறித்து, யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் நவரட்ணராஜா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி வடக்கு பிரதேசங்களில் உள்ள 18 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக சுழற்சிமுறைக் கடனடிப்படையில் மொத்தம் 3 கோடி ரூபாவை நிகொட் நிறுவனம் வழங்கவுள்ளது.

மேற்படி சுழற்சிமுறைக் கடன் வழங்கும் வைபவம் எதிர்வரும் 7 ஆம் திகதி மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் நிகொட் திட்டப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணசபை அதிகாரிகள் யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் உட்படப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடம்பெயர் அவலவாழ்வு தீர்க்கப்படாவிடின் உண்ணாவிரதம் இருந்து உயிர்துறப்போம்!

## இடம்பெயர்ந்தோர் நலன்புரி சங்க சமாசம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர் அவல வாழ்வை அனுபவிப்பதைவிட, நாம் உண்ணாவிரதமிருந்து சாவதே மேல் என யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி சங்க சமாசம் தெரிவித்துள்ளது.

நாளை இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்கவுள்ள சமாசம் - அன்றைய தினம் தமது சொந்த இடங்களுக்கச் செல்லத் தம்மை அனுமதிக்குமாறு கோரி தொடர் உண்ணாநோன்பையும் அனுஷ்டிக்கவுள்ளது.

இது குறித்து சமாசம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நாம் சொந்த மண்ணைவிட்டு விரட்டப்பட்ட காலம் முதல், நாளாந்தம் இறந்து கொண்டு இருக்கின்றோம்.

எமது உண்மை நிலையைப் பல தடவைகள் சர்வதேசத்திற்கும், பொது அமைப்புக்களுக்கும் எடுத்துக்கூறிய போதிலும்கூட, இன்றுவரை எமக்காக யாரும் நீதி வழங்கவோ அல்லது எமது நிலைமையை உணரவோ மறுத்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் எம்மால் இனியும் துன்ப துயரங்களுடன் வாழமுடியாது என்ற நிலைமைக்கு வலிந்து தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே, சிறிது சிறிதாக நாளாந்தம் இறப்பதிலும் பார்க்க தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் இறப்பது மேல் எனக் கருதுகின்றோம்.

இதன் அடிப்படையில் சொந்த மண்ணில் வாழவும், தொழில் செய்யவும் எம்மை அனுமதிக்க வேண்டும் என்று வேண்டுவதுடன் இதற்கான நடவடிக்கையைத் தாங்கள் மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் - இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் பெப்ரவரி 4ஆம் திகதி அன்று எமது சுதந்திரத்தை வேண்டித் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு, எம்மை மாய்ப்பதென முடிவெடுத்துள்ளோம் என்பதைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம் என, அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மலையகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ப)

அறிக்கை

S.U.கிருபாகரன்

# உயர் பதவிகளை வகிப்போர் மனச்சாட்சிப்படி நடத்தல் வேண்டும்

**பிரான்சைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'தமிழர் மனித உரிமைகள் அமைப்பின்' (TCHR) பொதுச் செயலாளர் எஸ்.வி.கிருபா கரன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை இங்கு பிரசுரமா கின்றது.**

சாதாரண எல்லைப் பிணக்குகள், இனம், மொழி, மதம் தொடர்பான பிணக்குகள் எனப் பல்வேறு பிரச்சினைகளை நாம் சந்தித்துக் கொண்டு வருகின்றோம், அறிந்துகொள்கின்றோம். இவற்றின் உச்சமாக உலக மகாயுத்தங்கள் இரண்டு மாக உலக மகாயுத்தங்கள் இரண்டு இடம்பெற்றுள்ளன என்பதையும் அறிந்துள்ளோம்.

இவ்வாறான பிரச்சினைகள், யுத்தங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கான தேவைகளினை உலகத் தலைவர்கள் உணர்ந்திருந்தனர். அதன் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை, பொதுநலவாய நாடுகள் அமைப்பு என்பன சர்வதேச மட்டத்தில் உருவாக்கப்பட்டன.



அதேவேளை, ஐரோப்பிய ஆணையம், ஐரோப்பிய சபை, அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு, ஆபிரிக்க ஐக்கியத்திற்கான சபை, தென்னாசிய நாடுகளின் பிரதேச ஒருமைப்பாட்டிற்கான சபை, தென் கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு என்பன பிரதேச மட்டத்திலும் உருவாக்கப்பட்டன.

இவ்வாறான நிறுவனங்களின் உருவாக்கத்தினைவிடவும், மேலும் பல அமைப்புக்களும் இது விடயத்தில் செயற்பட்டுவருகின்றன.

மனித உரிமைகளை - சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றினூடாக மேம்படுத்துவதற்கென இவை உருவாக்கம் பெற்றுள்ளன.

இனம், மதம், நிறம் ஆகிய வேறுபாடுகளை நீக்கி, சகல மக்களுக்கும் சேவையாற்றும் நோக்கில் இவற்றின் உருவாக்கம் அமைந்துள்ளது.

சர்வதேச மட்டத்தில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவியான - ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் பதவியை இதுவரை காலமும் ஏழு பேர் வகித்துள்ளனர். தற்போது பதவியில் உள்ளவரும் இதில் அடங்குவர்.

நோர்வே நாட்டை பிறப்பிடமாகக் கொண்ட ரைகிவ்லை, சுவீடனைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்கமல்ஸ்கியோல்- இவர் 1961 ஆம் ஆண்டு விமான விபத்தொன்றில் மரண மானார். அதன் காரணமாக உதவிகாரியதரிசியாகக் கடமையாற்றிய 'உதண்டா' இவர் 1971 ஆம் ஆண்டுவரை பதவி வகித்தார். முதலாவது ஆசிய நாட்டவராகவும் இவர் விளங்கினார்.

ஒஸ்ரியாவைச் சேர்ந்த 'சாட்பால்ட் செய்ம்' (1972- 1981) இவர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பதவி முடிவுற்றதும், ஒஸ்ரியாவின் ஜனாதிபதியாகப் பணியாற்றியிருந்தார். சிறந்த ராஜதந்திரியாக இவர் இருந்து, தன்னை அரசியலில் நன்கு நிலைநிறுத்திக்கொண்டார்.

பெரு நாட்டைச் சேர்ந்த பேரஷ் குரலர் (1991) எகிப்து நாட்டைச் சேர்ந்த (1992) டொக்டர் புரொட்டஸ் புரொட்டஸ் காலி - இவர் குறுகிய காலமே பதவி வகித்தார். பின்னர் தற்போது பதவியில் உள்ளவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர் கானா நாட்டினை பிறப்பிடமாகக் கொண்ட கோபி அனான் ஆவார்.

இவ்வாறு ஐக்கியநாடுகள் சபையின் உயர்பதவிகளில் பல்வேறு நாட்டவரும் பதவி வகித்துள்ளனர். பரிணாம வளர்ச்சியின் ஓரங்கமாக உலகில் எல்லாமே மாற்றத்திற்குள்ளாகி வருகின்ற சூழ்நிலையில், சர்வதேச அரங்கில் அரசியல் முக்கிய பங்கினை வகிக்கிறது. இதனால், ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவிகள் தவறான அரசியல் வாதிகளிடம் சென்றுவிடுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய செயற்பாடுகளில் மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்ட மாநாடுகளை அது நடத்தியுள்ளமை புலனாகிறது. இந்த மாநாடுகள் யாவும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளால் கையொப்பமிடப்பட்டு, மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைத தெளிவுபடுத்துவதற்காகவே கூட்டப்படுகின்றன.

இதில் ஒரு வேடிக்கையான விடயம் என்னவென்றால் - ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடுகளுக்கு தனது நாடு சார்பாகக் கையொப்பமிட முன்வராத சில நாடுகள் - ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவியை விரும்புகின்றன.

இவ்வாறான பதவிக்கு வரவிரும்புவர்கள் - விரும்புகின்ற நாடுகளில் இனமுரண்பாடுகள், இரத்தக்களறி மிகுந்த போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான ஒரு நாட்டிலிருந்து ஐ.நாவின் உயர்பதவியைப் பெறவிரும்புபவர்களின் நோக்கம் - தமது சொந்த நாட்டினதும், தமது சுயமரியாதையைப் பேணுவதும் மாத்திரமேயாகும். இது ஐக்கிய நாடுகள் சபையின் நன்மைக்காக அல்ல. இந்த எண்ணம் இவர்களிடம் துளிகூட கிடையாது.

அண்மையில் இவ்வாறான நிகழ்வுகளுக்கு உதாரணமாகக் கருதக்கூடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றது. பொதுநலவாய நாடுகளின் பொதுக்காரியதரிசி பதவிக்கான தேர்தலில் - இலங்கையின் முன்னாள் அமைச்சர் ஒருவரும் போட்டியிட்டார். இவர் சொந்த நாட்டில் மனித உரிமை மீறல்களை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்த காரணத்தால் - அந்தப் பதவி அவருக்குக் கிடைக்காமல் போய்விட்டது. ஒரு நாட்டுக்குள்ளேயே வாழ்கின்ற ஒரு இனத்திற்கு எதிரான பொருளாதார தடையை இவர் ச்ரியானதென வாதிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

போர் நடைபெறுகின்ற நாடுகளில் சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்கு ஐக்கிய நாடுகளின் சமாதானப் படைகளையும், போரை அவதானிப்பதற்கான குழுக்களையும் அனுப்பி வைக்கின்ற செயற்பாட்டினை ஐக்கிய நாடுகள்சபையின் பணிதொடர்பாக அதற்குக் கிடைத்த வெற்றியெனக் குறிப்பிடலாம்.

இந்தவகையில், நல்லதொரு சமரச முயற்சிகளில் ஈடுபட்டு, பேச்சுவார்த்தைகள் மூலம் பல பிரதேசங்களில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வழிவகை செய்துள்ளது.

சில நாடுகளின் சுயநிர்ணய உரிமைக்கும் ஐக்கிய நாடுகள்சபை வழி வகுத்துள்ளது. இந்த முயற்சியால் குறித்த சில நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளாகவும் மாறியுள்ளன.

ஜனநாயகத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில், ஜனநாயகத்தை வழிப்படுத்தி சுதந்திரமான தேர்தல்கள் நடைபெற வழிவகுத்துள்ளது.

மனித உரிமைகள் ஆணையம் - மனித உரிமை மீறல்களை விசாரணை செய்து, மனித உரிமையை நிலைநாட்டி உள்ளது.

சித்திரவதை, காணாமல் போதல் தொடர்பான உண்மைகள், பலாத்காரமான கைதுகள் ஆகியவற்றை உலகின் பார்வைக்குக் கொண்டுவந்துள்ளது.

பல நாடுகளில் சர்வதேசங்களின் அழுத்தங்களைப் பிரயோகிக்கச்செய்து, அந்த நாடுகளின் மனித உரிமைகளை நன்கு பேணவைத்துள்ளது

சூழல் பாதுகாப்பு, அணு ஆயுத பரவல் தடுப்பு, சர்வதேச சட்டங்களை வலுப்படுத்தல், சர்வதேச பிரச்சினைகளுக்கு சட்டவரைபுகளுடனான தீர்வு கண்டுள்ளமை, போர் நடைபெறும் பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்களுக்கு மனிதநேய உதவிகளை வழங்கியமை, வளர்ந்து வரும் நாடுகளில் தொடர்ந்து காணப்பட்ட பட்டினி, வறுமையைப் போக்குவதற்குச் செயலாற்றியமை, பெண் உரிமைகளை மேம்படச் செய்தமை, பெண்களின் எழுத்தறிவை விருத்திசெய்தமை, கண்ணிவெடிகளை அகற்றியமை, கல்வியை மேமபடுத்தியமை, கலாசார சொத்துக்களை பேணிப்பாதுகாப்பதற்கு உதவிபுரிந்தமை முதலான செயற்பாடுகள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளாக இருந்துவருகின்றன.



இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி, தவறான முறையில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்பதவி ஒன்றினைப் பெற்ற ஒருவர், உண்மையான சேவையை ஆற்றுவாரோ என்றால் அது கேள்விக்குரிய விடயமாகும். இந்த நிலையில் அந்தக் கேள்விக்குரிய விடை இல்லை என்பதாகவே அமையும். இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவிகளை வகிப்பவர்களும், வேறு கண்ணியமான பதவிகளை வகிப்பவர்களும், தங்களின் மனச்சான்றுக்கு கண்ணியமானவர்களாக செயற்படவேண்டியது அவசியமாக இருக்கின்றது.

உயர் பதவிகளில் தமது மனச்சான்றுகளின்படி நடக்காதபோது, விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்கு என ஒரு நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றவாளிகளுக்கான நீதிமன்றம் என்ற பெயரில் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீதிக்கான நிரந்தர அமைப்பாக இது செயற்பட்டு வருகின்றது. மனித இனத்தின் மீது நடத்தப்பட்ட படுகொலைகள், குற்றங்கள், போர்க்கால வன்முறைகள் இவற்றை விசாரணை செயவதற்கு அதிகாரம்கொண்ட ஒரு அமைப்பாக விளங்கும் வகையில் சர்வதேச நீதிமன்றம் செயற்படுகின்றது. இந்த அமைப்பில் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை 139 நாடுகள் அங்கத்தவர்களாகக் கையொப்பமிட்டுள்ளன. மேலும், 90 நாடுகள் இதில் இணையவுள்ளன.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் 191 நாடுகள் அங்கம் வகிக்கின்ற நிலையில், குறிப்பிட்ட சில நாடுகளே இந்த அமைப்பில் இணைந்துகொண்டுள்ளன. மிகுதி நாடுகள் இந்த அமைப்பில் இணைந்து கொள்ளாமைக்கு உரிய காரணம் என்ன என்பது புரியவில்லை.

சம்பந்தப்பட்ட நாடுகள் முன்னரோ, தற்போதோ மனித இனத் திற்கு எதிரான இனப்படு கொலைகள், போர்க்கால குற்றங்கள் முதலியவற்றில் ஈடுபட்டுள்ளார்களா? என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்த நிலையில், உலகில் தோன்றிய பல்வேறு விதமான பிரச்சினைகள் தொடர்பாக ஐக் கிய நாடுகள் சபை தீர்மானங்களை நிறை வேற்றியுள்ளது.

இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையில் பொதுக்காரியதரிசியாகப் போட்டியிட விரும்பும் ஒருவருக்குச் சில முன் நிபந்தனைகளை விதிக்கவேண்டியது அவசியமானது எனக் கருதத் தோன்றுகிறது.


அங்கத்துவ நாடுகள் மாத்திரமன்றி, இணையவிருக்கும் நாடுகளும், குறிப்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இணைய சம்மதம் தெரிவித்த நாடுகளும் இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த நடைமுறைகள் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர்களின் கண்ணியத்தை வெளிப்படுத்துவதாக முன் நிபந்தனைகள் அமையவேண்டும். இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எவ்வாறு செயற்பட்டார்களோ, அதேசெயற்பாடுகளை இனிமேல் பதவியில் வகிப்பவர்களும் மேற்கொள்ள வேண்டும்.

☆

## ஈராக் மீது தொடுக்கப்பட்ட போர்

# சுதந்திர விசாரணைக்கு புஷ் இணக்கம்; விசாரணைகள் அடுத்த வாரம் ஆரம்பம்!



(வொஷிங்ரன்)

ஈராக் மீது மேற்கொள்ளப்பட்ட போர் தொடர்பாக சுதந்திரமான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு புஷ் இணக்கம் தெரிவித்தார்.

அடுத்தவாரம் இது தொடர்பான சுதந்திரமான விசாரணை ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும், இதற்கென்று விசேடமாக ஒரு விசாரணைக்குழு அமைக்கப்படவுள்ளதாகவும், அவரே குறிப்பிட்டார்.

ஈராக் மீது அமெரிக்கா, போர் தொடுத்ததற்கு புலனாய்வுத்துறையினரின் தவறான தகவல்களே காரணமெனவும் ஈராக்கில் பேராபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் காணப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் எவையும் இல்லை எனவும் அண்மையில் பதவி விலகிய 'டேவிட் கே' கூறியிருந்தார்.

இதனையடுத்து புஷ் நிர்வாகத்தின் மீது அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கின,

விசாரணைகளுக்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்த புஷ், காங்கிரஸின் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகளின் அழுத்தம் காரணமாக அவ்வாறான விசாரணை ஒன்றுக்கு தற்போது இணங்கியிருக்கிறார்.

மறைந்த ஜனாதிபதி 'கெனடியின்' மரணம் தொடர்பாக 1960 களில் நடத்தப்பட்ட 'வாறன் ஆணைக்குழு' போன்ற ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விசாரணைக்குழுவில் அரச நிர்வாகத்தில் அங்கம் வகிக்கும் அதிகாரிகள் அல்லாத புத்திஜீவிக்கும், ஜனநாயகக் கட்சி மற்றும குடியரசுக் கட்சியின் அங்கத்தவர்களுமாக மொத்தம் 9 பேர் இடம்பெறக்கூடியவாறு இந்த விசாரணைக்குழு அமைக்கப்படும் எனவும், அடுத்த ஆண்டில் இந்தக்குழு விசாரணையின் முடிவுகளை அறிவிக்குமெனவும் புஷ் கூறினார்.

சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின் அறிவிக்கப்படும் முடிவுகள் அமெரிக்காவின் புலனாய்வுச் சேகரிப்பில் பாரிய தாக்கத்தினை உருவாக்கலாம் என குடியரசுக் கட்சியின் அங்கத்தவர் 'பீட்டர் கிங' கூறினார்.

அடுத்த நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலுக்கு இந்தப் பிரச்சினையை தமது தேர்தல் பிரசாரமாக உபயோகப்படுத்துவதற்கு ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் முடிவை அடுத்த வருடம் தெரிவிக்கலாம் என்ற புஷ்ஷின் கருத்தின் மூலம், தேர்தல் பிரசாரமாக இந்தப் பிரச்சினை யைப் பயன்படுத்துவற்கு தடையேற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## இஸ்ரேல் தாக்குதல்; ஜிகாத் தலைவர் உயிரிழப்பு!

(காசா)

காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேலியப் படையினரின் முற்றுகையொன்றில், இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் தலைவர் எனக் கருதப்படும் யஸீர் அல் அசெய் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை ரபர்வில் என்ற இடத்தில் வீடொன்றினை முற்றுகையிட்ட இஸ்ரேலியப் படையினர், சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது படையினர் மீது கிரனைட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மோதல்களின்போதே இவர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

மூன்று துப்பாக்கிதாரிகள் கொல்லப்பட்டனர் எனப் இஸ்ரேலியப் படையினரால் தெரிவிக்கப்பட்டபோதும், மேலும் ஒருவர் கொல்லப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

செப்ரெம்பர் 2000 ஆம் ஆண்டில் பலஸ்தீனியருக்கும் இஸ்ரேலியப் படையினருக்குமிடையே இதுவரை நடைபெற்ற மோதல்களில் 2600 பலஸ்தீனியர்களும், 875 இஸ்ரேலியர்களும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க உதவி அமைச்சர் ஈராக்கிற்கு இரகசிய விஜயம்!

அமெரிக்க உதவிப் பாதுகாப்பு அமைச்சர் போல் வெல்வ் பொலிற்ஷ் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரை சந்திப்பதற்கு இரகசிய விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஈராக் சென்றிருந்தபோது இவர் தங்கியிருந்த விடுதி மோட்டார் தாக்குதலுக்கு உட்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் பணியாற்றும் படையினரை திருப்பி அழைத்து வேறு படையினரை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும் தற்போது ஈராக்கில் கடமையாற்றிவரும் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து உரையாடுவதே தனது விஜயத்தின் முக்கிய நோக்கமெனவும் அவர் தெரிவித்தார்.



தவறான புலனாய்வுத் தகவல்களின் மூலம் ஈராக்கின் மீது போர் தொடுக்கப்பட்டது என்ற கருத்திற்கு மறுப்புத் தெரிவித்த உதவிப் பாதுகாப்பு அமைச்சர், ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டது ஈர்க்கிய மக்களுக்கு ஏற்பட்ட ஒரு முக்கியமான நிகழ்வெனக் குறிப்பிட்டிருந்தார்.

உலக நோக்கு

# உயர் பொலிஸ் அதிகாரி காஷ்மீரில் சுட்டுக்கொலை!

(சிறிநகர்)

இந்திய நிர்வாகத்தின் கீழ் அமைந்துள்ள காஷ் மீரின் தலைநகர் 'ஸ்ரீநகரில்' உயர் பொலிஸ் அதிகாரி மொஹமட் அமின்பாட், அடையாளம் காணப்படாத துப்பாக்கிதாரி ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர், அங்கு மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானுக்கும் - இந்தியாவுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுவரும் வேளையில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மிதவாதப் போக்குடைய காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும், இந்திய துணைப் பிரதமர் அத் வானிக்கும் இடையே கடந்த ஜனவரி மாதம் பேச்சுக்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து இவ்விரு நாடுகளின் தலைவர்களிடையே பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றன. அதில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.



உலகம் முழுவதும் மிகவும் பிரசித்திபெற்ற மோனோலிசா அழகிய ஓவியத்துக்கு இன்னும் மதிப்புக் குறையவில்லை. இந்த நிலையில் ஜப்பானிலுள்ள ஒரு சொக்லெட் நிறுவனம் மோனோலிசா வடிவில் ஒரு சொக்லெட்டை உருவாக்கியுள்ளது. 77 சென்ரிமீற்றர் உயரமும், 53 சென்ரிமீற்றர் அகலமும் கொண்ட அந்த மோனோலிசா சொக்லெட்டை டோக்கியோ நகரில் அறிமுகப்படுத்திய காட்சி.

# அதிக குழந்தைகளைப் பெற்றால் சிங்கப்பூரில் விசேட சலுகைகள்!

## அந்நாட்டுப் பிரதமர் அறிவிப்பு

உலகிலேயே அதிக சனத்தொகை கூடிய நாடு சீனா தான். சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அந்த நாட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதேபோல் சிங்கப்பூர், தென்கொரியா, ஜப்பான் உட்பட பல்வேறு கிழக்கு ஆசிய நாடுகள் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டன.

இதனால் இந்த நாடுகளின் சனத்தொகை எதிர்பார்த்த அளவிற்கு அதிகமாகவே குறைந்துவிட்டது. பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்து முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இளவயதினர் எண்ணிக்கை குறைந்து நாட்டின் பொருளாதாரமும் தொழில் வளர்ச்சியும் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து புதிய பிரசாரத்தை சிங்கப்பூர் அரசு தொடங்கியிருக்கிறது. இதுவரை 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளாதீர்கள் என்று பிரசாரம் செய்துவந்த சிங்கப்பூர் அரசு, 2 குழந்தைகளுடன் நிறுத்திக்கொள்ளாதீர்கள். 3 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறது.

அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு - 3 குழந்தைகளையோ அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளையோ பெற்றுக் கொள்பவர்களுக்கு மானியம், வரிச் சலுகை, ஊக்க கொடுப்பனவு போன்றவை வழங்கப்படும் என சிங்கப்பூர் பிரதமர் அறிவித்திருக்கிறார்.

குழந்தைகள் கொடுப்பனவுத் திட்டம் ஏற்கனவே அங்கு அமுலில் இருக்கிறது.

இந்தப் புதிய சலுகைத் திட்டங்களால் 2006 ஆம் ஆண்டிலிருந்து சனத் தொகை அங்கு அதிகரிக்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குர்திஷ் மக்கள் வாழும் பிரதேசம் எங்கும் கறுப்புக் கொடிகள் மற்றும் சோக கீதம்!

ஈராக்கில் குர்திஷ் இன மக்கள் வாழும் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுள் மாகாண அரசின் உயர் மட்ட அதிகாரிகளும் அடங்கியுள்ளதாக 'குர்திஷ்' பிராந்திய அரசின் மனித உரிமைகளுக்கான அமைச்சர் முஹமட் இசான் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற 'இற்பில்' பிரதேசத்தின் ஆளுநர் அக்ராம் நின்ரிக், துணைப் பிரதமர் சாமி அப்துல் ரகுமான், தலைமை அமைச்சர் சாங்காட் செயிக், விவசாய அமைச்சர் சாட அப்துல்லா ஆகியோரே கொல்லப்பட்ட உயர் மட்ட அதிகாரிகள் ஆவர்.

இதனால், குர்திஷ் தொலைக்காட்சி சோக கீதங்களை ஒலிபரப்பி வருவதாகவும், மக்கள் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டுள்ளதாகவும் பி.பி.சியின் உலகச் செய்தியாளர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல்பிறிமொர் - அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதல் எனவும் தெரிவித்தார்.

அல்கொய்டாவும், அதற்குச் சார்பான குழுக்களுமே இந்தத் தாக்குதலுக்கு காரணமெனவும், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 100 இற்கு மேற்படலாம் எனவும் குர்திஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முஸ்லிம் குழுவான அன்சர் அல்இஸ்லாம் இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈராக்கின் வெளிநாட்டு அமைச்சர் கொசியார் செபாரி, தெரிவித்தார்.

இந்தக் குழு ஒஸாமா பின்லாடனின் அல் கொய்டாவுடன் தொடர்புடையது என அமெரிக்கா தெரிவித்தது. ஈராக்கின் வடபகுதியான குர்திஷ் இன மக்கள் வாழும் பகுதியில் இயங்கிவந்த இந்தக் குழுவினர் குர்திஷியர்களினாலும், அமெரிக்க கூட்டுப்படையினராலும், ஈராக்கின் மீதான அமெரிக்கப்போரின் போது வெளியேற்றப்பட்டிருந்தனர்.

ஈராக்கில் அதிகரித்துவரும் வன்முறைகள் அன்சார் அல் இஸ்லாம் குழுவை மீண்டும் செயற்பட வைத்துள்ளதாக, குர்திஷ் தேசப் பற்று அமைப்பின் 'சபாசபீர் தெரிவித்தார்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




"இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடும் தருணம் வந்துவிட்டது..."

"என்ன... புசத்துகிறாய்... மணியம்... பிறகும் இந்திய படையைக் கூப்பிடப்போறாயோ...?

நான் புசத்தேல்லை... எங்கடை கதிர்காமு அண்ணைதான் சொல்லுறார்..."

"ஆர் சைக்கிள் கடை கதிர்காமுவோ..."

"ஏன் அந்தாளுக்கு என்ன விசரே அப்படிச்சொல்ல... லக்ஷ்மன் கதிர்காமர்தான் புசத்தியுள்ளார்..."

"அதுதானே பார்த்தன்... இந்த அளவுக்கு கதைக்கிறதுக்கு அவரால்தான் முடியும். இப்ப கனகாலமா ஐயா டெல்கிக்குத்தான் அடிக்கடி யாத்திரை போய் காவடி எடுக்கிறார்..."

"ஓமோம் உள்ளூருக்கை அந்த ஆள் எதையாவது சொன்னா நீங்க ஆளை ஒரு மாதிரியாப் பாக்கிறீங்க... கேட்கக்கூடிய இடத்தில போய் அந்த ஆள் எதையாவது புலம்பட்டும் உங்களுக்கென்ன..."

"அது சரி பைத்தியக்காரனைச் சுற்றியும் நாலுபேர் இருக்கத்தானே செய்யினம்..."

"ஆராருக்கோ அடிக்கிறாய் போலிருக்கு... அதோட ஆள் சமாதானம் செத்துக் கொண்டிருக்கு கெதியாய் வாங்கோ எண்டுமெல்லே சொல்லியுள்ளார்..."

"ஏனாம் கடைசித்தண்ணி பருக்கவே... கதிகாமர் பாவம்... இப்ப இழவு வீட்டுச் செய்தி சொல்லுற ஆளா வந்திட்டார்.... பாத்தியோ...

"அதுசரி நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சுக்கு சந்திரிகா அனுமதி வழங்கீட்டாவாம் தெரியுமே...?

"அதுக்குத்தானே பாதுகாப்பு அமைச்சை பறிச்செடுத்தவ... சமாதானத்திற்கு கடைசிச் சத்திரசிகிச்சை செய்யப்போறா போலை..."

"இது சமாதானத்தை தப்பவைக்கிறத்துக்கான சத்திரசிகிச்சையில்லை... அதை சாகடிக்கிறத்துக்கான சத்திரசிகிச்சை... விளங்குதே...!

தெருவாசி

# சுகாதார சேவை ஊழியர்களின் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது

சுகாதார சேவை ஊழியர்கள் சிலர் கடந்த எட்டு தினங்களாக மேற்கொண்டுவந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவது தொடர்பான சுற்று நிருபத்தை சுகாதார அமைச்சர் தங்களிடம் சமர்ப்பித்ததையடுத்து, இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டதாக சுகாதார சேவை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்தது.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபம், கூட்டமைப்பின் நிபந்தனைகளுக்கு அமைவாக இருப்பதாக கூட்டமைப்பு மேலும் தெரிவித்தது.

சுகாதார சேவை ஊழியர்களின் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர - பிரதமர் தலைமையிலான அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை வரவேற்பதாக கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சமன் ரத்தனப்பிரிய தெரிவித்தார்.

இதேவேளை, உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களை அவர்களது வீடுகளுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் கூட்டமைப்பு மேற்கொண்டிருந்தது.

# நிகொட் பணிகளை அவதானிக்க உயர்மட்டக் குழு யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

நிகொட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிடுவதற்காக இந்த மாதம் 7 ஆம் திகதி நிகொட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, நிகொட் நிறுவனத்தின் இலங்கைக்கான திட்டப்பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினரே எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருக்கும் அவர்கள் - மருதங்கேணி, மற்றும் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய பகுதிகளில் நிகொட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப்பணிகள் தொடர்பாக ஆராயவுள்ளார்கள்.

அவர்கள், பணிகள் இடம்பெறும் இடங்களுக்கு விஜயம் செய்யும் போது, பணியில் ஈடுபட்டுவரும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அங்கு பிரசன்னமாகியிருக்குமாறு யாழ்.மாவட்ட நிகொட் அலுவலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ப)

# சிற்றூர்தி சேவைகள் நாளை குடாநாட்டில் நடைபெறாது!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கான சிற்றூர்திச் சேவைகள் நாளை நடைபெறமாட்டாதென, யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சங்கத்தின் தலைமைச் செயலகம் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கவில்லையென்பதை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தவேண்டும். இதற்காக குடாநாட்டிலுள்ள வெகுஜன அமைப்புக்கள் நாளை ஏற்பாடு செய்துள்ள பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, யாழ்.மாவட்டத்தில் சிற்றூர்திச் சேவைகளை நாளை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பத்திரிகையாளர் சங்க அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் அவசர கூட்டமொன்று நாளை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் கொட்டடி பணிமனையில் செ.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, சங்க உறுப்பினர்கள சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

# கணவனின் கொலை தொடர்பாக பொலிஸாரின் விசாரணையில் அதிருப்தி

## மனித உரிமை ஆணைக்குழுவில் மனைவி முறைப்பாடு

தனது கணவனின் கொலை தொடர்பான பொலிஸ் விசாரணையில் அதிருப்தி தெரிவித்து, பெண் ஒருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி மட்டுவில் பகுதியில் வைத்து, வீடு திரும்பிக் கொண்டிருந்த தெய்வேந்திரம் ஜசிந்தனன் (வயது 21) என்பவர் மீது இனந்தெரியாதோர் பெற்றோல் ஊற்றி தீயிட்டுக்கொளுத்தி இருந்தனர். அவர் மூன்று தினங்களின் பின் மரணமடைந்திருந்தார். அவர்து மனைவியான ஜ.கமலினி என்பவரே இந்த முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

அவரது முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, தனது கணவன் தீயிட்டுக் கொழுத்தப்பட்டு கடந்த மூன்று நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். அந்த வேளை அவர் நன்கு கதைத்ததுடன், தன்மீது பெற்றோல் ஊற்றிக்கொளுத்தியவர் என, நகை வேலை புரியும் ஒருவர் மீது சந்தேகம் தெரிவித்தார்.

எனினும், அவர் உயிருடனிருந்து எம்முடன் பேசியவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பொலிஸார் - அவரிடம் எந்தவொரு வாக்குமூலத்தையும் பெறவில்லை.

அவர் இறந்தபின் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் எமது முறைப்பாட்டைத் தெரிவிக்கச் சென்ற சமயம் அவர்கள் எனது கணவரின் மரணத்துக்குத் தற்கொலையே காரணம், கொலை அல்ல என எழுதித் தருமாறு வற்புறுத்தினர்.

மாலை 4.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை எம்மை அச்சுறுத்தியும், தாமதப்படுத்தியும் தாம் விரும்பியபடி வாக்குமூலம் வழங்குமாறு தெரிவித்தும், நான் அதற்கு உடன்படவில்லை. இதனால், எனது வாக்குமூலத்தை வாங்கிக்கொண்டு வீடு செல்ல அனுமதித்தனர்.

பொலிஸாரின் நடவடிக்கை அவர்கள் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறது. எனவே, எனது கணவனின் கொலை தொடர்பாக மனித உரிமை அடிப்படையிலான விசாரணை நடத்தி முடிவு தருதல் வேண்டுமென அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்தார். (ப)

## ஆப்கான்...

சேர்ந்து ஆப்கானிஸ்தானில் நடந்த படை நடவடிக்கைகளில் பங்குபற்றி வந்ததாகவும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## ஈ.பி.டி.பி...

கதியில் காண்பது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி ஆக்கபூர்வமாகச் செயற்படவேண்டும் என அந்தக் கட்சியுடனான பேச்சுவார்த்தையின்போது, ஈ.பி.டி.பயின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டதாக அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போராளியின் வித்துடல் இன்று விதைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சுகவீனம் காரணமாக சாவடைந்த 2 ஆம் லெப். யாழின்பன் (முத்தையா புஷ்பராசா, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை) என்பவரது வித்துடல் இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். நினைவஞ்சலிக் கூட்டத்தின் பின்னர், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ மரியாதை அணிவகுப்பின் பினனர் விதைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பி...

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் பிரயாணிகளிடம் இந்தக் காய்ச்சல் சம்பந்தமாக பரிசோதனைகள் நடத்தப்படவேண்டும் என்றும் பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## தேர்தலை...

யாற்றிய சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்க, பொதுஜன முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை - சுதந்திரக் கட்சியின் விசேட கூட்டமொன்று நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

## மேலும் நான்கு...

மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டு, கூட்டணியில் இணைவது தொடர்பான உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

ஜே.வி.பியும் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து உருவாக்கிய பஞ்சகொள்கையை ஏற்றுக்கொள்வதாக முடிவுசெய்தன.

இந்த நிகழ்வில் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும் கலந்துகொண்டதுடன், சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, தேசிய ஐக்கிய முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் முக்கிய தலைவர்கள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ரோக்கியோவில் அகாஷி...

இதுவல்ல என்றும் ஆனால், ரோக்கியோ மாநாட்டின்பின் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படுமெனவும் ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி கொழும்பில் நடந்த கூட்டத்தில் ரோக்கியோ மாநாட்டில் வழங்கப்பட்ட நிதியுதவிகளை விரைவாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

ஆனாலும், ரோக்கியோ மாநாட்டில் நிதியுதவி வழங்க முன்வந்த நாடுகள் - இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடியினால் பின்னடிப்பதாகவும், எனவே அரசியல் நெருக்கடியை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார்.

சமாதான முயற்சிக்கு முழு ஆதரவினையும் நிதி வழங்கும் நாடுகள் வழங்குகின்றபோதும், இன்னமும் அது தொடர்பில் முன்னேற்றம் தேவையெனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடியும் தீர்க்கப்படவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நெருக்கடி நிலைமை ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணிலும் தீர்ப்பார்களென தாம் ஆழமாக நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தமது திட்டவரைபை முன்வைத்தபின்னர் சமாதான முயற்சிகளில் அரசு அதிக அக்கறை காட்டவில்லை. இதனால் நிதியுதவி வழங்கும் நாடுகள் மிகுந்த கவலையடைந்துள்ளன.

பல குழு உணர்வின் மூலம் ஏற்பட்ட ஒருங்கிணைப்பே உதவி வழங்கும் கூட்டமாகுமென யசுஷி அகாஷி கூறினார்.

தெற்கில் அரசியல் நெருக்கடி நிலை தீராமல் தொடர்ந்து செல்வதை வெளிநாட்டு அரசாங்கங்கள் அவதானித்து வந்துள்ளன.

ரோக்கியோ மாநாட்டில் சொல்லப்பட்ட விடயங்களுக்கு அரசும், புலிகளும் இணைந்து செயற்படவேண்டுமென வேறு சில அரசாங்கங்கள் கூறியுள்ளன.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையிலும், பங்குச்சந்தையில் முதலிட வெளிநாடுகள் முன்வந்தாலும் பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை நாட்டின் இறைமைக்கு தீங்கில்லாத வகையில் உதவிகளை வழங்கத் தாம் தயாராகவிருப்பதாகவும் அகாஷி தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மாதம் 17 ஆம் திகதி வொஷிங்ரனில் நடைபெறவுள்ள கூட்டத்தில் ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, இந்தியா ஆகிய 4 நாடுகளும் கலந்துகொள்ளுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளுடனான...

சுக்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதிதான் முடிவெடுக்கவேண்டும். கடந்த சில ஆண்டுகளாக விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான போர் நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதனைப் பயன்படுத்திக்கொண்டு விடுதலைப் புலிகள் தங்கள பலத்தை இரண்டாகப் பெருக்கிக் கொண்டுள்ளனர். அவர்களின் படை எண்ணிக்கையை குறைக்கும் விடயத்தில் சட்டச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றோம்.

நாட்டின் ஜனாதிபதியான சந்திரிகா 2006 ஆம் ஆண்டு வரை பதவி வகிப்பார். அதற்கு அரசியற்சசட்டத்தில் இடமுண்டு என்று கதிர்காமர் தெரிவித்தார்.

## பல்கலைக்கழக...

இருபபது, பல்கலைக்கழக ஊழியர்களிடையே காட்டப்படும் மாற்றாந்தாய் மனப்போக்கு மற்றும் புதிய நிர்வாகத்தில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும், அவற்றுக்கு சரியான தீர்வுவேண்டும் எனக் கோரியுமே இந்த மறியற்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இநதப் போராட்டத்தினால் நேற்று இடம்பெறவிருந்த சாரதி தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை இடம்பெறவில்லை.

விடுமுறை தினமாக நேற்றைய தினம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், பல ஊழியர்கள் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு எதிரான பல வாசகங்களையும் ஆங்காங்கே ஒட்டியிருந்தனர். இந்த வாசகங்கள் பல்வேறு ஊழல்களையும் மோசடிகளையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.